விலை ரூபா: 8.00

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 06 வள்ளுவர் ஆண்டு 2036 வைகாசி 30 திங்கட்கிழமை (13.06.2005) தொலைபேசி 2223378, 2227644 ஒலி 176



ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து


# பொதுக் கட்டமைப்பு உருவாக்கப்படும்

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரிடம் ஜனாதிபதி உறுதி



(நமது நிருபர்)

**ஆழிப்பேரலையினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்களை வழங்குவதற்கும், புனரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்குமாக விடுதலைப் புலிகளுடன் இணைந்த உத்தேச பொதுக்கட்டமைப்பு விரைவில் உருவாக்கப்படுமென ஜனாதிபதி உறுதியளித்துள்ளார். எவருடைய அழுத்தத்தின்பேரிலும் தான் அதனைக் கைவிடப்போவதில்லை எனவும் அவர் கூறியுள்ளார்.**

நேற்றுமாலை ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்ற தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினருடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார். பொதுக் கட்டமைப்பு, நாட்டின் தற்போதைய நிலை என்பன தொடர்பாக ஆராய்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந்தார். அதனடிப்படையிலேயே இச்சந்திப்பு நேற்று நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது பொதுக் கட்டமைப்பை அமைத்துக்கொள்ளல், திருகோணமலையின் தற்போதைய நிலை மற்றும் தற்போதைய அரசியல்நிலை என்பது குறித்து விரிவான (10 ஆம் பக்கம் பார்க்க)



## பொதுக்கட்டமைப்புத் தொடர்பாக சுதந்திரக்கட்சி இடையே முரண்பாடு

(கொழும்பு)

பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்துவது தொடர்பில் சுதந்திரக் கட்சியின் அமைச்சர்களிடையே முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

அமைச்சரவை அந்தஸ்துள்ள மூத்த அமைச்சர்கள் சிலரும், சில பிரதி அமைச்சர்களும் விடுதலைப் புலிகளுடன் பொதுக் கட்டமைப்பில் ஒப்பமிடவேண்டாம் என்று ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்துவருகிறார்கள். வேறுசில அமைச்சர்கள் ஒப்பமிடுவதற்குத் தமது ஆதரவை வழங்கிவருகிறார்கள்.

அரசாங்கத்தின் வீழ்ச்சிக்குப் பொதுக்கட்டமைப்பு வழிவகுக்குமாயின், அதனைக் கைவிடவேண்டும் என்று நுகர்வோர் வெளிவிவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னாண்டோபுள்ளே இறுக்கமான தீர்மானம் கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

சுனாமியால் பாதிக்கப்பட்ட வடக்குக் கிழக்கு மக்களுக்கு உதவ ஜனாதிபதி நினைக்கிறார். ஆனால் தமிழரசுக்கட்சி அரசாங்கத்தை ஆதரிப்பதற்குத் தயார் இல்லை. இது தொடர்பில் புலிகளும் கருத்துஎதுவும் கூறவில்லை. பிரதான எதிர்க்கட்சியும் ஆதரிப்பதாக இல்லை. ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் எதிர்க்கிறது.

அரசாங்கம் வீழ்ச்சியடைந்தால் பொதுக்கட்டமைப்பு எவ்வாறு அமுல்செய்யப்படும். இவ்வாறு பெர்னாண்டோபுள்ளே கருத்து வெளியிட்டுள்ளார். (ச-6)

## பொதுக்கட்டமைப்பிற்கு அஸ்கிரிய பீடாதிபதி ஆதரவு

(கொழும்பு)

ஜனாதிபதியால் உருவாக்கப்படவுள்ள உத்தேசப் பொதுக் கட்டமைப்பால் நாட்டுக்கு அச்சுறுத்தல் எதுவுமில்லை என்பதால் அது குறித்து அச்சப்படத் தேவையில்லையென அஸ்கிரிய பீடாதிபதி வண. உடுகம புத்திரகிந்த தேரர் தெரிவித்துள்ளார். நேற்று முன்தினம் ஜனாதிபதியைச் சந்தித்த அஸ்கிரிய பீடாதிபதி இதனைத் தெரிவித்துள்ளார்

ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது பொதுக்கட்மைப்பின் முழு விபரங்களையும் கேட்டறிந்துகொண்ட அவர் அதன்மூலம் நாட்டிற்கு எந்தவித அச்சுறுத்தலும் ஏற்படாதெனக் கூறியுள்ளார். நாடு பிளவுபடாத நிலையில் வடக்குக் கிழக்கு மக்களுக்கு உதவவேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஜனாதிபதியிடம் இருக்கின்றது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன, மத, மொழி வேறுபாடுகளின்றி நிவாரணம் வழங்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையென ஜனாதிபதி கூறியுள்ளதாக தேரர் தெரிவித்தார். (ச)

## புலிகளின் விமானங்களை கண்காணிக்க வெளிநாட்டு உதவிகள் பெறப்படும்

### விமானப்படைத் தளபதி டொனால்ட் பெரேரா

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் வான் படையின் அச்சுறுத்தலை எதிர்கொள்ள விமானப்படையினர் எதிர்ப்பு அணி தயாராக இருப்பதாக விமானப்படைத்தளபதி ஏயார் மார்ஷல் டொனால்ட் பெரேரா தெரிவித்துள்ளார்.

விமானப்படையின் வான் தாக்குதல் ஒன்றை நடாத்திப் புலிகளின் வான்படையையும், ஓடுதளத்தையும் அழித்துவிடும் ஆற்றல் விமானப்படைக்கு உண்டு. ஆனால் தற்போது நடைமுறையிலுள்ள போர்நிறுத்த ஒப்பந்தம் காரணமாகவே நாம் தாக்குதலை மேற்கொள்ளமுடியாமலிருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

தியத்தலாவ இராணுவ முகாமில் நடைபெற்ற படைத்துறை அதிகாரிகளின் நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய அவர், புலிகளின் விமானங்களை கண்காணிப்பதற்கு கருவிகளைப் பொருத்துவதற்கு தாம் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், இந்த நடவடிக்கைக்கு தாம் வெளிநாடுகளின் உதவிகளைக் கோரியுள்ளதாகவும் தெரிவித்தார்.

வெளிநாட்டு உதவிகள் எமக்குக் கிடைத்தவுடன் புலிகளின் வான் விமானங்கள் கண்காணிக்கப்படும்.

புலிகள் வான்படையை உருவாக்கியுள்ளமை இலங்கைக்கு மட்டுமல்ல அயல் நாடான இந்தியாவுக்கும் பாரிய அச்சுறுத்தலை ஏற்படுத்துமென அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-8)

## முரண்பட்ட இரு கட்சிகளின் இணைவு இந்த நாட்டிற்கு பெரும் சாபக்கேடு

### ஐ.தே.க எம்.பி. ராஜித கவலை

(கொழும்பு)

இலங்கையின் அரசியல் வரலாற்றில் பொருந்தாத அரசியல் கருத்துக்களைக் கொண்ட இரண்டுகட்சிகளான சுதந்திரக் கட்சி, ஜே.வி.பி. என்பன இணைந்துகொண்டுள்ளமை நாட்டின் சிக்கல்களுக்கும், பிரச்சினைகளுக்கும் காரணமென ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இரண்டு அரசியல்கட்சிகளும் ஒன்றாக இணைந்துகொண்டமையாலேயே பொதுக் கட்டமைப்பு, சமாதான முயற்சிகள் போன்றவை வெற்றியடையவில்லை. இதனால் எந்தவொரு நடவடிக்கையும் முன்னெடுக்கப்பட முடியாதநிலையில் அரசு உள்ளது.

இது நாட்டிற்கு பெரும் சாபக்கேடாக அமைந்துள்ளதாக அவர் கூறினார். இவர்கள் நாட்டு மக்களினதோ, நாட்டினதோ நலன்கருதி ஒன்றிணையாமல் ஐக்கிய தேசியக்கட்சியைத் தோற்கடித்து ஆட்சி பீடத்தைக் கைப்பற்றுவதற்காக செயற்பட்டார்கள்.

ஆனால் இன்று அவர்களுக்கு இடையில் நெருக்கடிகளும், பிரச்சினைகளும் தோன்றியுள்ளது.

இவர்களின் பிரதான பிரச்சினையாக உள்ளது வடக்குக் கிழக்கு மக்களுக்கான பொதுக் கட்டமைப்பை பெற்றுக்கொடுப்பதே. அம்மக்களுக்கு உணவளிப்பது, உடைமைகளை வழங்குவது, வீடுகளை வழங்குவது, வைத்திய (10 ஆம் பக்கம் பார்க்க)

## இன்று பல்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

பொதுக்கட்டமைப்பிற்கு எதிராக பௌத்த தேரர்களாலும், சிங்களப் பேரினவாதிகளாலும் மேற்கொள்ளப்படும் எதிர்ப்பு நடவடிக்கைகளைக் கண்டித்து இன்று யாழ். பல்கலைக்கழக மாணவர்களால் ஆர்ப்பாட்டப்பேரணி ஒன்று நடாத்தப்படவுள்ளது.

இன்று பல்கலைக்கழக வளாகத்தில் ஒன்றுகூடும் மாணவர்கள் பௌத்த பேரினவாதக்கொள்கை அடைக்கப்பட்ட பெட்டியைச் சுமந்துகொண்டு பரமேஸ்வராச் சந்தி வரை சென்று அங்கு அப்பெட்டியைத் தீமூட்டவுள்ளனர். (ச)

### அலுவலக இடமாற்றம்

வலம்புரிப் பத்திரிகையின் புதிய பணிமனை இல - 3, இரண்டாம் ஒழுங்கை பிறவுண்றோட் (நீராவியடிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமை) எனும் முகவரியில் இயங்குகிறது என்பதை அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

வலம்புரிக் குடும்பம்



EXPOAIR
your friend in the skies...
யாழ் – கொழும்பு
விமான பயணத்திற்கு அழையுங்கள்:
யாழ்ப்பாணத்தில் - 021 222 3891/6297, 0772 2349999/ 8888
கொழும்பில் - 011 2372952 / 3, வெள்ளவத்தையில் - 011 2360290/ 91
Email - jaffna@expoavi.com, reservations@expoavi.com
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்...


நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்


# வலம்புரியின் புதிய அலுவலகத் திறப்புவிழாவிலிருந்து...



















# பூதளக் கடற்தட்டுகள் பிறழ்ச்சி! பூகோளக் கடற்தளங்கள் நீட்சி!

தொடர்ச்சி...

3 ஒரு கண்டத்தின் நிலத்தட்டு திருப்பிவிடும் ஒளிக்கதிரின் காலத்திற்கும் அடுத்த கண்டத்தின் நிலத் தட்டு திருப்பி விடும் ஒளிக்கதிர் காலத் துக்கும் உள்ள வேறுபாடு ஒரு குறிப்பிட்ட கால வரையறையில் பதிவு செய்யப்படு கிறது! அந்தக் காலவேறுபாடு மிகையா னாலும் அல்லது குறைந்து போனாலும், நிலப்பெயர்ச்சியின் அளவையும், வேகத்தை யும் கணக்கிட முடியும்.

### பூகோளக் கண்டங்களின் நிலப் பெயர்ச்சி!

1885 ஆம் ஆண்டில் ஆஸ்டிரியன் பு,தளவாதி எட்வெர்டு சூயஸ் (Eduard Suess (1831-1914) கூறிய மகத்தான கருத்து இதுதான். ஒரு காலத்தில் தென்கோளத்தின் கண்டங்களான தென் அமெரிக்கா, ஆபிரிக்கா, இந்தியா, அவுஸ்திரேலியா, அன்டார்டிகா ஆகிய அனைத்தையும் இணைக்கும் நிலப்பாலம் ஒன்று இருந்திருக்க வேண்டும். அந்த நாடுகளில் எல்லாம் அவர் பொது வாகக் கண்ட பு,ர்வ படிவச் செடி (Fossil Fern Glossopte ris (Plant)) ஒன்றின் உறுதிப்பாட்டில் அவ்விதம் கூறினார். அந் தப் பெருங்கண்டத்திற்கு "கோந்துவானா" (Gondwana, a district in India) என்று பெயரிட்டார். இந்தியாவில் கோந்து வானா என்னும் மாநிலத்தில் எட்வெர்டு சூயஸ அந்தப் புர்வச்செடியை முதலில் கண்டதால், அவை காணப்படும் அனைத்துக் கூட்டுக் கண்டங் களுக்கும் ஓர் இந்தியப பெயரை இட்டார்.

தென்பகுதியான கோந்துவானா கண் டமும் வடபகுதியான லெளரேசியாக் கண்டமும் (Lauresia) சுமார் 200 மில்லி யன் ஆண்டுகளுக்கு முன்னே ஒற்றைப் பெருங்கண்டமான பங்கயாவிலிருந்து (Pangaea) பிரிந்ததாகப் பின்னால் ஜெர்மன் விஞ்ஞானி ஆல்ஃபிரெட் வெஜினர் கூறினார். வடபகுதியான லெளரேசியாக் கண்டத்தில் வடஅமெரிக்கா, யுரேசியா (ஐரோப்பா+ஆசியா (இநதியா தவிர)) இரண்டும் ஒன்றாக இருந் தன என்பது வெஜினர் கருத்து. முதலில் தோன்றிய ஒற்றைப் பெருங்கண்டத்துக்கு "பங்கயா" என்று பெயரிட்டவர் ஆல்ஃபிரெட் வெஜினர். கிரேக்க மொழியில் பங்கயா என்றால் "எல்லாம் நிலம்" என்று அர்த்தம்.

### கண்டங்களின் நிலப்பெயர்ச்சிக்குச் சான்றுகள்!

1912 இல் ஆல்ஃபிரெட் வெஜினர் ஒரு காலத்தில் கண்டங்கள் யாவும் மெய்யாகச் சேர்ந்திருந்தன என்னும் கோட்பாட்டைக் கூறினார். தென் அமெரிக்காவில் கிழக்கே பெருத்துள்ள பிரேஸில் பகுதியும், ஆபிரிக் காவின் மேற்கில் உள்ள கினியா வளை குடாவும் ஒத்த வயதையும், ஒரே வளை வைக் கொண்டதாகக் காணப்படுகின்றன என்று வெஜினர் சுட்டிக்காட்டினர்.

அவை இரண்டும் ஒரே பு,தளவியல் துணி யில் வெட்டப்பட்ட தளம்போலத் தோன்று கின்றன. ஒரேவித பு,ர்வப் படிவச் செடிகளும், குடிநீர் விலங்குகளும் (Fossil Plants & Fresh- Water Animals) தென் அமெ ரிக்கா, ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா, வெகு தூரத்தில் உள்ள இந்தியா ஆகிய அனைத்

**இணையப் பார்வை**

துக் கண்டங்களிலும் இருப்பதைக் காட்டி னார். சேர்ந்திருந்த கண்டங்களில் தான் அந்த விலங்குகள் வாழ்ந்திருக்க முடியுமேதவிர, ஆயிரக்கணக் கான மைல் தூரம் கொந் ளிக்கும் உப்புக் கடலின் வழியே தப்பிப் பிழைத்துப் பயணம் செய்திருக்க முடியாது என்று காரணம் கூறினார்.

மெஸேசாரஸ் என்னும் ஊர்ந்து செல்லும் சிறிய விலங்கின் பு,ர்வப்படிவம் (Fossil of Reptile Mesosaurus) தென் அமெரிக் காவின் பிரேஸிலும், ஆபிரிக்காவிலும் இருந்தாக வெஜினர் சான்றுகள் காட்டினார்.

(தொடரும்)

# பொதுக்கட்டமைப்பை நிறுவி பேச்சை முன்னெடுத்தால் அரசாங்கத்திற்குப் பூரண ஆதரவு வழங்குவோம்

## -கூட்டமைப்பு எம்.பி.ஜோசப் பரராஜசிங்கம்

(கொழும்பு)

இலங்கையின் தற்போதைய அரசியல் சூழலில் தேர்தல் வந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே போட்டியிடுவோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

அண்மையில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, மலேசியா நாடுகளுக்கான பயணத்தை மேற்கொண்டு நாடு திரும்பிய ஜோசப் பரராஜசிங்கம் மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் நாளிதழ் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே இதைக் குறிப்பிட்டுள்ளார்.

பயணம் குறித்தும் சமகால அரசியல் நிலைவரங்கள் தொடர்பாகவும் அவர் அளித்த பேட்டியில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

அவுஸ்திரேலியா, மலேசியா, நியூசிலாந்து ஆகிய நாடுகளுக்கு நான் பயணங்களை மேற்கொண்டேன். ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட வடகிழக்கு மாகாணத்திற்கு நிதி முறையாகப் பகிர்ந்தளிக்கப்படவில்லை என்பதை எடுத்துக் கூறுவது மட்டுமன்றி நிவாரணப் பணிகளை மேற்கொள்வதற்கும், மீள்கட்டுமானப் பணிகளைத் தொடர்வதற்கும் ஒரு பொதுக்கட்டமைப்பு அவசியம் என்பதை எடுத்துக் கூறுவதே இப் பயணத்தின் நோக்கமாகும்.

அதேநேரத்தில், கடந்த 20 ஆண்டுப் போர்ச் சூழல் காரணமாக பல இலட்சக்கணக்கான மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாக வாழ்ந்து வருகிறார்கள என்பதையும், அதேநேரத்தில் இந்த மூன்றாண்டு கால யுத்த நிறுத்தம் அல்லது சமாதான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட காலப் பகுதியில் கூட எந்தவொரு நிவாரணப் பணிகளும் அரசாங்கத்தால் முன்னெடுத்துச் செல்லப்படவில்லை என்பதை அங்குள்ள அவுஸ்திரேலிய அரசாங்க, எதிர்ககட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரசாங்கத்தினுடைய முக்கியமான கமிட்டியின் தலைவர்கள், அங்குள்ள பொது ஸ்தாபனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றைச் சந்தித்துத் தெளிவுபடுத்தியதோடு நியூசிலாந்து நாட்டிலே முக்கியமாக வெளிவிவகார அமைச்சர், அரசியல்கட்சி, நாடாளுமன்ற உறுப்பினர்களையும் சந்தித்து இது விடயமாகப் பேசினேன்.

அதுமட்டுமன்றி புலம்பெயர்ந்து வாழ்கின்ற தமிழ் மக்களோடு கூட இந்த விடயங்களைப் பகிர்ந்து கொண்டு வடகிழக்கு மாகாணத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணப் பொருட்களை அளித்தமைக்கு நன்றியைத் தெரிவிததோடு அதே போறு மலேசிய அமைச்சர் சாமவேத அவர்களைச சந்தித்து ஆழிப்பேரலை தொடர்பான பரச் சினை குறித்துக் கதைத்ததுடன முன்னைய எதிர்க் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் வர்த்தகப் பிரதிநிதிகள் புலம்பெயர் மக்களுடனும் உரையாடினேன்.

ஆழிப்பேரலை ஏற்பட்ட போது வடகிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் உடனடி நிவாரண வேலைகளில் ஈடுபட்டார்கள் எனவும் அதற்கு அங்குள்ள பல அரச சார்பற்ற நிறுவனங்களும் நிவாரணங்களை வழங்கிச் செயற்பட்டதன் காரணமாகத் தான் மக்கள் பட்டினியில் சாகாமல் உயிர் தப்பினார்கள் என்பதும் அரசின் நிவாரணப்பணி இரண்டு, மூன்று கிழமைக்குப் பிற்பாடுதான் அங்கு வந்து நேர்ந்தன என்பதையும் அவர்களுக்கு எடுத்துக் கூறினோம்.

தமிழ் மக்களுடைய பிரச்சினை தீர்க்கப்படும் என்பதில் அவுஸ்திரேலியா, நியூசிலாந்து, மலேசியா ஆகிய நாட்டு அரசாங்கங்கள் உன்னிப்பாக அக்கறை செலுத்துகின்றன.

அதேநேரத்தில் சமாதான முயற்சி வெற்றிபெற வேண்டும் என்பதற்குரிய ஆதரவினையும் அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கின்றார்கள். அதேபோன்று பொதுக்கட்டமைப்பு அவசியம் என்பதையும் அவர்கள் வலியுறுத்தி வருகிறார்கள்.

நியூசிலாந்தின் வெளிவிவகார அமைச்சர் இலங்கைக்கு வந்து சென்றிருக்கின்றார். அவர் வடகிழக்கு மாகாணத்திற்குச் சென்று அங்குள்ள நிலமைகளைப் பார்வையிட ஸ்ரீலங்கா அரசு விடவில்லை என்ற மனவருத்தத்தை அவர் தெரிவித்தார்.

இதேபோன்று, அவுஸ்திரேலிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் இலங்கைக்கு வந்து வடகிழக்குப் பகுதியைப் பார்வையிட்டிருக்கிறார்கள். எனவே அவர்களால் இந்தச் சமாதான முயற்சி முன்னெடுத்துச் செல்லப்பட வேண்டும்.

இலங்கைத் தமிழருடைய இந்தப் பிரச்சினை தீர்க்கப்படவேண்டும். இதற்கு இந்தப் பொதுக்கட்டமைப்பு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கும் என்றும் இந்தக் கட்டமைப்பை ஏற்படுததும் பட்சத்தில் தேங்கிக் கிடக்கும் சமாதான முயற்சியை முன்னெடுத்துச் சென்று இரண்டு தரப்பிற்கும் ஒரு புரிந்துணர்வு ஏற்பட்டு சமாதானத்தினை ஏற்படுத்துமென்ற நம்பிக்கையும் அவர்களுக்கு இருக்கினறது. அதனை அவர்கள் தெளிவுபடுத்தினர்.

உண்மையில் அவர்கள் எங்களுடைய மக்களின் துன்பங்கள், துயரங்களில் அதிக அக்கறையாக இருக்கிறார்கள். அதேபோல் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் தமிழ் மக்களுக்கும் முழுமையான ஆதரவு அவர்களிடம் இருக்கின்றது. அவர்கள் தமிழ்த் தேசிய உணர்வுடன் பல செயல்களைச் செய்து வருகிறார்கள்.

தற்பொழுது இ[illegible]கயின் அரசியல் சூழ்நிலை மிக[illegible] சிக்கலான நிலையில்தான் இரு[illegible]கிறது. இருந்தபோதிலும் இலங்கையினுடைய பொருளாதார[illegible]னை இலங்கை அரசு மேல் எடுத்து[illegible] செல்ல வேண்டும். ஆனால் பொதுக்கட்டமைப்பை அமைத்துத்தான் ஆகவேண்டும். ஏனென்றால் இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் மற்றும் சர்வதேச சமூகம் என்பவை பொதுக் கட்டமைப்பை ஏற்படுத்தினால் தான் இலங்கைக்கு நாங்கள் நிதி உதவி வழங்குவோம் என்று கூறியிருக்கின்றன.

அவர்கள் ஏற்கனவே கொடுப்பதாக உறுதி அளித்து இருக்கின்ற 3 மில்லியன் அமெரிக்க டொலர் பணத்தையும் அதேநேரத்தில் சமாதான முயற்சி முன்னெடுக்கப்பட்டால் மீதியாக தாங்கள் வெளியிட்ட 4.6 மில்லியன் டொலரை வழங்குவதாக இருந்தால் முழுமையாக பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டும்.

அதே நேரத்தில் சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதை அவர்கள் தெளிவுபடுத்தியிருக்கிறார்கள். எனவே அரசு முழுமையாக இலங்கையினுடைய பொருளாதாரத்தைச் சீர்திருத்தி ஒன்று திரட்ட விரும்பினால் உண்மையாக பொதுககட்டமைப்பை உருவாக்கித் தான் ஆகவேண்டும்.

இந்த நடவடிக்கையில் எந்தளவிற்கு ஜனாதிபதி வெற்றி பெறுவார் என்பது கூறமுடியாது. ஏனெனறால் அவர்களுடைய பங்காளிக் கட்சிகளான ஜே.விபி. அப்படியொரு பொதுக்கட்டமைப்பில் கைச்சாத்திட்டால் தாங்கள் விலகிச் செல்வோம என்று பயமுறுத்தி வருகின்றார்கள். அப்படியிருந்த போதும் ஜனாதிபதியவர்கள் பொதுக்கட்டமைப்பைக் கைச்சாத்திடுவது என்று பல இடங்களில் கூறிவருகின்றார்.

ஆனால் எந்தளவிற்கு இதய சுத்தியோடு, நம்பிக்கையோடு வழி நடத்துவார் என்பதைக் கூறமுடியாது. ஆனால் ஒன்று எம்மைப் பொறுத்தவரை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை இவற்றையெல்லாம் நாங்கள் அவதானித்துக் கொண்டு வருகின்றோம்.

பொதுக்கட்டமைப்பு நிர்மாணிககப்பட்டு மீண்டும் பேச்சுவார்த்தைகள ஆரம்பிக்கப்படுமேயானால் எங்களுடைய நாடாளுமன்றக் குழு கூடித் தீர்மானித்து அந்தநேரத்தில் இருக்கின்ற நிலைமையைச் சீர்தூக்கிப் பார்த்து முன்பிருந்த ஐக்கிய தேசி யக் கடசிக்கு ஆதரவை வழங்கி[illegible]னோம் அந் தளவிற்கு உண்மையாக அரசாங்கம் பொதுக்கட்டமைப்பை நிறுவி தேங்கிக் கிடக்கின்ற சமாதானப் பேச்சுவார்தையை முன்னெடுத்து, தமிழீழ விடுதலைப் புலிகள் முன்வைத்த இடைக்கால நிர்வாக அதிகாரத்தை ஏற்படுததக்கூடிய ஒரு சூழ்நிலையை ஏற்படுத்துவார்களா[illegible]னால் அவர்களுக்கு நாங்கள் ஆதரவு வழங்குவோம்.

இதேவேளை, தேர்தல் வந்தால் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அதை ஜனநாயக வழிமுறையில் கண்டிப்பாக எதிர்கொள்ளும். வட கிழக்கில் சென்ற தேர்தலில் எவ்வாறு போட்டியிட்டதோ அவ்வாறு அது போட்டியிடும்.

எல்லாவற்றிற்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் சேர்ந்து அவர்களுடன் கலந்து யோசித்துத்தான் இந்த விடயத்தில் முடிவு எடுக்கும் என்றும் ஜோசப் பரராஜசிங்கம் எம்.பி. மேலும் குறிப்பிட்டுள்ளார். (ற)



## இராசி பலன்

**13.06.2005**
**(வைகாசி 30, திங்கட்கிழமை)**
**சஷ்டி பிற்பகல் 1.45 மணிவரை**
**மகம் முன்னிரவு 7.33 மணிவரை**
**இராகுகாலம் 7.22- 8.52 மணிவரை**
**சுபநேரம் 11.52 -1.22 மணிவரை**

| | |
|---|---|
| மேடம் | வியாபார நன்மை, காரிய தாமதம், பணக் குறைவு,.ரோக நிலை. |
| இடபம் | மாதாசுகம், எடுத்த காரியம் தாமதமாகும், உடல்நலக் குறைவு, புதிய தகவல். |
| மிதுனம் | கூட்டு முயற்சி, கீர்த்தி, பிரயாண நன்மை, சகோதரர் உதவி. |
| கடகம் | அதிக செலவு, விதண்டாவாதம், முயற்சி தாமதம், போசன சுகக் குறைவு. |
| சிங்கம் | கற்பனை மிகுதி, போசன சுகம், நல்ல முயற்சி, நண்பர்கள் சந்திப்பு. |
| கன்னி | வீண் அலைச்சல், சுபசெலவு, வேலைச் சுமை, சயன சுகக் குறைவு. |
| துலாம் | குடும்ப மகிழ்ச்சி, தொழில் விருத்தி, காரிய அனுகூலம், தனவருவாய். |
| விருச்சிகம் | நண்பர்கள் உதவி, முயற்சி கைகூடும், அதிகாரம், சுபசெலவு. |
| தனுசு | புதியதிட்டமிடல், சரீரப் பிரயாசை, காரிய தாமதம், பிரயாணம். |
| மகரம் | உடல்நலக்குறைவு, வீண் வகை, காரிய தடங்கல், பணக்குறை. |
| கும்பம் | களஸ்தர நன்மை, பெருமையடைதல், எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை. |
| மீனம் | தேகநலன், முயற்சி பலிதம், பகைவரால் நன்மை, போசன சுகம். |

பழைய் நேரப்படி கணிப்பிடப்பட்டது

-வளவன்

### உரிய உதவிகளை வழங்கியதற்காக

## அனைத்துலக தொழில் ஸ்தாபனத்திற்கு தொழில் அமைச்சர் அதாவுட பாராட்டு

(கொழும்பு)

சுனாமியினால் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் சிறிய,பெரிய அளவில் வர்த்தகத்துறையில் ஈடுபட்ட வர்களுக்கும் உதவுமுகமாக அனைத்துலக தொழில ஸ்தாபனம் வழங்கிய உதவிகளை தொழில் உறவுகள் துறை அமைச்சர் அதாவுட செனவிரத்ன பாராட்டியுள்ளார்.

கடநத வாரம் அவர் ஜெனீவாவில் இடம்பெற்ற அனைத துலக தொழில் ஸ்தாபனத்தின் கூட்டம் ஒன்றில் உரையாற்றினார்.

சுனாமியால் இலங்கையில் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கும் சிறிய,பெரிய அளவில் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கும் உதவும் பொருட்டு துரிதமாக வருவாயை மீளப்பெறுவதற்கான திட்டம் ஒன்றை தமது அமைச்சு வகுத்திருப்பதாக அக் கூட்டத்தில் அவர் குறிப்பிட்டார்.

அனைத்துலக தொழில் ஸ்தாபனத்தின் கௌரவமான 'தொழில்' என்ற இலங்கை நிகழ்ச்சித் திட்டத்தின் அடிப்படையில தேசிய செயற்பாட்டுத் திட்டம் ஒன்றைத் தமது அமைப்பு தற்சமயம் வகுத்து வருவதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (ந-5)

## நாட்டிலுள்ள வைத்தியசாலைகள் 6 பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன

(கொழும்பு)

வைத்தியசாலைகளை சீரான முறையில் அபிவிருத்தி செய்யும் பொருட்டு சுகாதார அமைச்சு நாட்டிலுள்ள வைத்தியசாலைகளை 6 பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளது.

இதற்கான சுற்றுநிருபத்தை அமைச்சின் பதில் செயலாளர் டாக்டர் நிகால் ஜயதிலக சுகாதாரத் திணைக்களததிற்கு அனுப்பிவைத்துள்ளார்.

இதன்படி நாட்டிலுள்ள வைத்தியசாலைகள், போதனாவைத்தியசாலைகள், மாகாணப் பொது வைத்தியசாலைகள், மாவட்ட பொது வைத்தியசாலைகள், ஆதார வைத்தியசாலைகள்-ஏ,ஆதார வைத்தியசாலைகள்-பீ,பிரதேச வைத்தியசாலைகள் என வகைப்படுத்தப்பட்டுள்ளன.

இதனடிப்படையில் மேல்மாகாணத்தில் 14 போதனா வைத்தியசாலைகளும் தென்மாகாணத்தில் இரண்டு போதனா வைத்தியசாலைகளும், மத்திய மாகாணத்தில் மூன்று போதனா வைத்தியசாலைகளும்,வடக்கு-கிழக்கு மாகாணத்தில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையும் தரம் பிரிக்கப்பட்டுள்ளன. (ந-9)

## எஸ்.பியின் சட்டத்தரணிகள் கோரிக்கை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் எஸ்.பி.திஸநாயக்கவின சார்பாக ஆஜராகும் சட்டத்தரணிகள் அவர் கொடுத்த மனு தொடர்பான சமர்ப்பணங்களை பகிரங்க நீதிமன்றத்தில் மேற்கொள்வதற்கு திகதி நிர்ணயிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

எதிர்வரும் ஓகஸ்ட் 23ஆம் திகதியோ 30ஆம் திகதியோ, செப்டெம்பர் 5ஆம் திகதியோ நீதிமன்றத்தை கூட்டுவது சிறந்தது என அவர்கள் யோசனை கூறியுள்ளனர்.

நீதிமன்றத்தை அவமதித்த குற்றச்சாட்டுக்காக சிறைவாசம் அனுபவித்து வரும் எஸ்.பி.திஸநாயகக, தனது பாராளுமன்ற உறுப்புரிமை இரத்தாவதைத் தடுக்கும் இடைக்காலத் தடை உத்தரவை பிறப்பிக்குமாறு உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள் ளமை குறிப்பிடத்தக்கது. (ந-9)


**மிகவிரைவில் எதிர்பாருங்கள் உங்கள் வலம்புரியில்**

- ✷ மாணவர்களுக்கான கட்டுரைப்போட்டி
- ✷ சித்திரப் போட்டி
- ✷ புகைப்படப் போட்டி
- ✷ சிறுகதைப் போட்டி

**பெறுமதி மக்க பரிசில்களை வெல்லத் தயாராகுங்கள்**

**விபரம் மிகவிரைவில் உங்கள் வலம்புரியில்.**

# இலங்கை - இந்திய பாதுகாப்பு உடன்படிக்கை தமிழ்மக்களுக்கு ஆறாத ரணமாக அமையும்

## இந்தியப் பிரதமருக்கு வை.கோ கடிதம்

(சென்னை)

**இலங்கைக்கு இந்திய அரசு இராணுவ உதவி வழங் கினால் அது தமிழ்நாடு மற்றும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆறாத ரணமாகவே இருக்கும்.**

**இந்நிலையில் பாதுகாப்பு ஒப்பந்தத்தை இலங்கையுடன் செய்து கொள்வது முறையற்றதாகும் என்று இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக பொதுச் செயலாளர் வை.கோபாலசாமி கடிதம் அனுப்பியுள்ளார்.**

கடந்த மாதம் 4ஆம் திகதி தங்களைச சந்தித்த போது இலங்கையோடு இராணுவ ஒப்பந்தம் ஏற்படாது என்று தாங்கள் உறுதியளித்த போது நான் நிம்மதி அடைந்தேன். ஆனால், ஜுன் 10ஆம் திகதி கொழும்பு நகரில் செய்தியாளர்கள் சந்திப்பின்போதும் இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நடவ்சிங் உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தய - இலங்கை இராணுவ கூட்டுறவு ஒப்பந்தம் இறுதி வடிவம் பெறுவதற்கான பணிகள் நடைபெறுகின்றது என்று கூறினார்.

இதனை அறிந்து மிகுந்த அதிர்ச்சிக்கு ஆளானேன். இலங்கை அரசின் இராணுவ நிலைகளுக்கும், வான்வெளி பாதுகாப்பிற்காகவும் இந்தியா ராடர் சாதனத்தை வழங்க முன்வந்துள்ளதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

1995, 1998ஆம் ஆண்டுகளில் யாழ்ப்பாணத்தின் மீதும் அதன் சுற்றுப்புறப் பகுதிகளிலும் இலங்கை அரசு நடத்திய விமானத் தாக்குதலில் குண்டுவீச்சில் ஏராளமான அப்பாவித் தமிழ்மக்கள் கொல்லப்பட்டனர்.

இன்று தமிழர்கள் இல்லத்தில் விஸ்வரூபம் எடுத்துள்ள கேள்வி இதுதான்; இலங்கை விமானப்படை தமிழர்கள் பகுதிகளில் இனித் தாக்குதல் நடாத்துமானால் தமிழர்களைப் பாதுகாக்க இந்திய அரசு அரண் ஏதாவது ஏற்படுத்தப் போகின்றதா? என்பதுதான்.

இரு நாட்டு ஒத்துழைப்பு என்ற பெயரால் இலங்கைக்கு எந்தவித இராணுவ தளபாடத்தையும் இந்தயா கொடுக்கக்கூடாது. அதுவும இராணுவ உதவியை இலங்கை அரசிற்கு இந்தியா வழங்குமானால் இலங்கைத் தீவில் மட்டுமல்ல தமிழ் நாட்டில் வாழும் தமிழர்களின் இதயங்களிலும ஆற்றமுடியாத ரணம் ஏற்பட்டுவிடும்.

இந்தப் பிரச்சினையினுடைய கொடுமையையும் தமிழர்களின் உணர்வுகளையும் நிச்சயம் தாங்கள் உணர்வீர்கள். அதனால், இலங்கையோடு இராணுவ ஒத்துழைப்பு உடன்படிக்கையை இந்தியா செய்து கொள்ளாது என்று இன்னமும் நான நம்பிக்கையோடு இருக்கின்றேன் என்று இந்தயப பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு அனுப்பியுள்ள கடிதத்தில் வை.கோபாலசாமி மேலும குறிபபிட்டுள்ளார். (ற-9)

## திறப்பு விழா

(சில்லாலை)

தொல்புரம் மேற்கு திக்கரை தமிழ்த்தாய் சனசமூக நிலையக் கட்டடத் திறப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப.2.30 மணிக்கு கா.முத்துலிங்கம் தலைமையில இடம்பெறவுள்ளது.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக வலிமேற்கு பிரதேச செயலர் சி.ஏ.மோகன்ராஸ்ம், கௌரவ விருந்தினர்களாக பாராளுமன்ற உறுப்பினர் திருமதி.பத்மினி சிதம்பரநாதன், யாழ்.மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர். (ற-2)

## திருமலை புத்தர்சிலை விவகாரம்;

# நீதிபதிக்கு கொலை அச்சுறுத்தல்

(திருகோணமலை)

திருமலையில் உள்ள திடீர் புத்தர் சிலையை அகறறக்கோரும் வழக்கு விசாரணையை நடத்திவரும் திருகோணமலை நீதிமன்ற நீதிபதி ஆர்.தியாகேந்திரனுக்குக் கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

சரியான தீர்ப்பை வழங்காவிட்டால் கொலை செய்துவிடுவோம என்று தமிழில் எழுதப்பட்ட கடிதத்தை சிங்களப் பேரினவாதிகள் அவருககு அனுப்பி வைத்துள்ளனர்.

இன்று இந்த வழக்கு விசாரணைக்கு வரும் நிலையில் இந்த அச்சுறுத்தல் கடிதத்தை தமிழ் கண்காணிப்புக் குழு என்ற பெயரில் சிங்களப் பேரினவாதிகள் அனுப்பி வைத்துள்ளனர்.

திடீரென முளைத்த புத்தர் சிலை நீக்கப்பட வேண்டியது நீதியானது, நியாயமானது என்கின்ற போது நாம் ஏன் இத்தகைய மிரட்டலைச் செய்யப்போகின்றோம்? பேரினவாதிகளின் வேலைதான் இது என்று திருமலை தமிழ் அமைப்புக்களின் பிரதிநிதிகள் கருத்துத் தெரிவித்துள்ளனர். (ற-9)

# சார்க் உச்சிமாநாடு நவ. 12,13 இல்

(கொழும்பு)

அடுத்த சார்க் உச்சிமாநாடு எதிர்வரும் நவம்பர் மாதம் 12, 13 ஆம் திகதிகளில் பங்களாதேஷ் தலைநகர் டாக்காவில் நடைபெறவுளளது.

சார்க் அமைப்பின் தலைவர் இந்தத் திகதிகளை அறிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் இரண்டு தடவைகள் இந்த உச்சிமாநாடு பிற்போடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை உட்பட சகல அங்கத்துவ நாடுகளும் இவ் உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளவுள்ளன. (ற-5)

# ஆளும் ஐ.ம.சு. கூட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த!

## கொழும்புத் தகவல்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சார்பில் ஜனாதிபதி வேட்பாளர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவே என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உறுதியளித்துள்ளதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த திங்கட்கிழமை பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடத்திய நீண்டநேர ஆலோசனையின் போது இந்த உறுதிமொழி அளிக்கப்படடதாகத் தெரிகின்றது.

தான் எதிர்க்கட்சித் தலைவராகவும் பிரதமராகவும இருந்து ஜனாதிபதியானது போல உங்களையும் ஜனாதிபதி ஆக்குகின்றேன்.

ஆனால் இதில் அரசியல் க்ட்சிகள விமர்சிப்பதற்கு இடமளிக்கக் கூடாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ராஜபக்ஷவிடம் கூறியதாகவும் அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

மஹிந்த ராஜபக்ஷ தான் ஜனாதிபதி வேட்பாளர் என்பதை தம்மை சந்தித்த ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களிடம் சந்திரிகா குமாரதுங்க கூறியுள்ளார்.

இந்த நாடாளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது ஜனாதிபதி வேட்பாளராக சந்திரிகாவால் அறிவிக்கப்படக் கூடும் என்று கூறப்பட்ட ஸ்ரீலங்கா சுற்றுலாத்துறை அமைச்சர் அனுரபண்டார நாயக்காவும் இச் சந்திப்பில உடன் இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ற-9)

# 50 இலட்சம் ரூபா நிதி செலவில் பண்ணையில் சிறைச்சாலை

## ஆராய பொறியியலாளர் குழு யாழ். வருகை

யாழ்ப்பாணம் பண்ணையில் 50 இலட்சம் ரூபா செலவில் சிறைச்சாலைக கட்டடததை அமைப்பது தொடர்பான உறுதியான முடிவை எடுப்பதற்காக சிறைச்சாலைத் திணைக்கள பொறியியலாளர் குழு ஒன்று எதிர்வரும் 18ஆம் திகதி யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளது.

யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருடன பண்ணைக்குச் செல்லும் இந்தக் குழுவினர், சிறைச்சாலைக் கட்டடத்தை நிர்மாணிப்பதற்கு ஒதுக்கப்பட்ட காணியைப் பார்வையிடுவர் எனத் தெரிவிக்கப்பட்டுளளது.

இதன்பின்னர் இக் குழு சமர்ப்பிக்கும் அறிக்கையை பரிசீலனை செய்த பின்னர் சிறைச்சாலையை அங்கு அமைப்பதற்கான அங்கீகாரம் வழங்கப்படுமெனவும் தெரிவிககப்படுகிறது. (ற-5)

# வதிவிட வரைபடம் சமர்ப்பிப்பு

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபா பிரிவிலுள்ள கடற்கரையோரங்களில் சுனாமி அனாத்தங்களுக்கு முன் எவ்வாறு குடியிருந்தார்களோ அதன் ஒழுங்கின்படி கடற்கரையிலிருந்து 300 மீற்றருக்கு அப்பால் குடியமர்த்துவதற்கு ஏற்றவாறு வதிவிட வரைபடம் கிராம சேவை அலுவலர்களால் தயாரிககப்பட்டு மருதங்கேணி உதவி அரசாங்க அதிபரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

இந்த வரைபட ஒழுங்கின்படி அரச சார்பற்ற நிறுவனங்கள் நிரந்தர வடுகளைக் கட்டிக் கொடுக்கவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-35)

# இராணுவ ஒத்துழைப்பு உடன்படிக்கைக்கு தமிழ்நாட்டில் கடும் எதிர்ப்பு

## போரார்ட்டங்கள் நடாத்தவும் முஸ்தீபு

(சென்னை)

இந்திய - இலங்கை அரசாங்கங்களின் நடவடிக்கைகளுக்கு தமிழ் நாடில கடும் எதிர்ப்பு உருவாகியுள்ளது.

இவ்விரு நாடுகளுககும இடையில செய்து கொள்ளபபடவுள்ள இராணுவ பாதுகாப்பு ஒத்துழைபபு உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் போராட்டத்தை நடத்துவதற்கான ஆலோசனைக் கூட்டம் சென்னையில் எதிர்வரும 15ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இது குறித்து விடுதலை சிறுத்தைகள் அமைப்பின் பொதுச் செயலாளர் திருமாவளவன் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அவ் அறிக்கையில்,

தமிழினத்திற்கு எதிராக இலங்கை அரசோடு பாதுகாப்பு உடன்படிக்கை செய்ய இந்திய அரசு முயற்சிப்பதை வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

அத்தகைய முயற்சியை கைவிட வேண்டும் என்று இந்திய அரசைக் கேட்டுக்கொள்கின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இது குறித்து தமிழகத்தில் தமிழ்த் தேசிய அமைப்புக்களோடு கலந்துரையாடி தமிழக மக்கள் சார்பில் இவ் உடன்படிக்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து எதிர்வரும் 15ஆம் திகதி சென்னையில கூட்டமொன்று நடைபெறவுள்ளது. (ற)

# பொதுக்கட்டமைப்பு ஒப்பந்தத்தை சபையில் தாக்கல் செய்வதே சரியானது

(கொழும்பு)

பொதுக்கட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தத்தை பாராளுமன்றத்தில தாககல் செய்வதே தற்போதுள்ள சூழநிலையில் ஏற்புடையதாக இருக்கும என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம தெரிவிக்க முககிய அமைச்சர்கள் சிலா முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பெருந்தோட்டத்துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா, சுற்றாடல் மற்றும் இயற்கை வள அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி, மின்சகதி அமைச்சர் சுசில் பிரேம் ஜயந்த ஆகியோர் உத்தேசப் பொதுக் கட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தத்தை பாராளுமன்றத்திற்குக் கொண்டு வருவதே நல்லது என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிடம் எடுத்துக்கூற தீர்மானித்திருப்பதாகத் தெரிவிககப்படுகின்றது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிலுள்ள உறுப்பினர்கள் சிலர் மற்றும் எதிர்க்கட்சி உறுபபினர்கள் ஆகியோரது எதிர்ப்புகளுககு மத்தியில் இந்தப் பொதுக கட்டமைப்பு தொடர்பான ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவது ஏற்புடையதல்ல என அவ் அமைச்சர்கள் சந்திரிகா குமாரதுங்கவிடும எடுத்துக் கூறவுள்ளனர். (ச-4)

# ஆயிரத்து ஐநூறு தற்காலிக வீடுகள்

(கொழும்பு)

சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 3 ஆயிரம் தற்காலிக வடுகளை அமைத்துக் கொடுக்கும் திட்டத்தின் கீழ் இதுவரை ஆயிரத்து 500 வீடுகள் அமைக்கப்பட்டுள்ளன என்று கடற்றொழில் நீரியல் வள அமைச்சு தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்கள ஏற்கனவே இந்த வீடுகளைப் பெற்றுள்ளன. அத்துடன், 150 நிரந்தர வீடுகளும் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-5)

# நியமனம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபையின நிர்வாக உத்தியோகத்தராக வடமராட்சி வலயக்கல்வி அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் அ.நடராஜா பொறுப்பேற்றுள்ளார்.

பருத்தித்துறை பிரதேச செயலக அலுவலக உதவியாளா எஸ்.இராமசாமி பதவி உயர்த்தப்பட்டு வடமராட்சி வலயம் கல்வி அலுவலக நிர்வாக உத்தியோகத்தராக நியமிக்கபபட்டுளளார். (ற-52)

# பொன்னாடை போர்த்தி கௌரவம்

(யாழ்பாணம்)

நல்லூர் திருஞான சம்பந்தர் ஆதீனத்தால் கடந்த மாதம் பத்து தினங்கள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் ஞானப்பாலுண்ட உறசவம் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

சித்திரை மாத திருவாதிரை தினமான கடந்த 12ஆம் திகதி தொடக்கம பத்துத் தினங்களும திருஞான சம்பந்தப் பெருமானுக்கு அபிஷேகப் பூசை, வழிபாடு நடைபெற்றதுடன், காலை 6.00 மணிக்கு திருஞான சம்பந்தசுவாமிகள வீதி உலாவாக நல்லூர் சிவன் கோயிலை அடைந்து பூசை நடைபெற்று அற்புதத் திருப்பதிகங்கள் ஓதப்பெற்று மீண்டும் ஆதீனத்தை வந்தடையும்.

முறையே பத்துத்தினங்களும அற்புதத் திருப்பதிகங்களை பண்ணோடு ஓதியதைப பாராட்டி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசசார்ய சுவாமிகளால் நல்லை ஆதீன ஓதுவார் மூர்த்திகளில் ஒருவரும், அகில இலங்கைத் திருமுறைமன்ற அமைப்பாளருமான சி.கிருஷ்ணமூர்த்திக்குப் பொன்னாடை போத்தி கௌரவிக்கப்பட்டது. (ற)

# ஈழத்தின் தேசிய இனப் பிரச்சினைகள்

## கலாநிதி செ. திருநாவுக்கரசு 20

இந்தியக் குடியுரிமை கோரியோர் தொகை எதிர்பார்த்த இலக்கிலுங் குறைவாகவும், இலங்கைக் குடியுரிமை கோரியோர் தொகை எதிர்பார்த்த இலக்கிலும் அதிகரித்தும் காணப்பட்டது. 'நாடற்ற' மக்களை இந்தியாவுக்கு நாடு கடத்தும் அவசரம் இலங்கை அரசினரிடம் அதிகரித்திருந்த வேளையில், ஒப்பந்த விகிதாசாரத்துக்கமைவாக இலங்கைக் குடியுரிமை வழங்குவதில் தாமதமும் காட்டப்பட்டதாக ஏராளமான புகார்கள் கூறப்பட்டன. ஆனால், காலப்போக்கில் எழுந்த அரசியல் நிர்ப்பந்தங்களினால் 1988இல் கொண்டுவரப்பட்ட விசேட சட்டத்தின் மூலம் நாடற்றவராயிருந்த அனைவருக்கும் குடியுரிமை வழங்கும் வாய்ப்பு உருவாகியிருக்கிறது. இருந்தபோதிலும், ஏதோ காரணங்களுக்காக இந்தியக் குடியுரிமைக்கு விண்ணப்பித்துவிட்டு, இதுவரையிலும் அங்கு செல்லமுடியாத தமிழர் பற்றி மனிதாபிமான முறையில் நடவடிக்கையெடுக்காது, கொடூரமான நோக்குடன் கட்டாய நாடு கடத்தலை அரசு நாடுவது விரும்பத்தக்கதல்ல. பொதுவாக இந்தியத் தமிழர் பற்றிய ஒப்பந்தங்களெல்லாம், இந்த மண்ணின் வளத்துக்காகத் தமது உழைப்பினை நல்கிய அவர்களது எண்ணங்களுக்கு மதிப்பளியாது, ஏதோ பண்டங்களைப் பங்கீடு செய்து கொள்வது போல் நடந்துகொண்டமை நாகரிக உலகம் வெட்கப்படக்கூடிய செயலாகும்.

அடுத்ததாக, 24.3.1965இல் உருவாகன டட்லி-செல்வா ஒப்பந்தம் பற்றியும் பார்ப்போம். அப்போதைய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சியும் சேரக்கூடிய சந்தர்ப்பத்தில் இவ்வொப்பந்தமும் உருவாக்கம் பெற்றது. தமிழ்மொழி விசேஷ விதிகள் சட்டத்தின்கீழ் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் தமிழை நிர்வாக, பதிவேட்டு மொழியாக்கவும் வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நீதிமன்ற நிர்வாகத்தைத் தமிழில் நடத்தவும், பதிவேடுகளைத் தமிழில் வைக்கவும், மாவட்ட சபைகள் நிறுவுவதற்கு நடவடிக்கையெடுக்கவும், வடக்குக் கிழக்குப் பகுதிகளில் நிலப்பங்கீட்டில் அங்குள்ள பிரசைகளுக்கும், இதர பகுதித் தமிழ்பேசும் மக்களுக்கும் முதலிடம் அளிக்கவும் வசதிகள் செய்யும் விதத்தில் சட்டப்பிரமாணங்களை உருவாக்குவதற்கு இந்த ஒப்பந்தம் உடன்பட்டது. இருந்தும் நடந்ததென்ன? ஒப்பந்தம் நிறைவேறவுமில்லை. மாவட்டசபை கூட உருவாகவுமில்லை. இறுதிவரை தமிழர்கள் கண்டது ஏமாற்றமேயன்றி வேறு எதுவுமில்லை. இந்த ஒப்பந்தங்களின் பட்டியலில் இறுதியாகக் குறிப்பிடக்கூடியது 1987ஆம் ஆண்டு யூலைமாதம் 29ஆம் திகதி கொழும்பில் உருவாக்கப்பட்ட இந்திய-இலங்கை ஒப்பந்தமாகும். இதுவரை காலமும் இடம்பெற்ற ஒப்பந்தங்களிலும் பார்க்க இந்திய-இலங்கை ஒப்பந்தத்திற்கு நிகழ்கால அழுத்தங்களும், அரசியல் ரீதியான உந்துதல்களும் விசேட தன்மையை அளிக்கின்றன. இதுவரை காலமும் சிங்கள-பௌத்த பேரினவாத ஆட்சியாளர்களுக்கு எதிரான சாத்வீகமான நடவடிக்கைகள் யாவும் தோற்றுப் போய்விட்டதாகக் கருதிய நிலையில், இலங்கைத் தமிழ் பேசும் மக்களது மனோநிலையில் ஏற்பட்ட மாற்றமானது, பிணக்குகளைப் பேச்சுவார்த்தையினாலல்லாது வன்முறை சம்பந்தமான ஆயுதப் போராட்டத்தினாலும் தீர்வுசெய்ய முயற்சிக்கலாமென்ற எண்ணக்கருத்துக்களை நாடச்செய்தது. அதன் அருட்டுணர்வுகள் மெல்ல மெல்ல வளர்ச்சிபெற்று, ஆயுதம் ஏந்திய குழுக்களின் தோற்றத்திற்கு வித்திட்டது. இத்தகு நிலைப்பாட்டின் கீழே இலங்கையின் இனப்பிரச்சினையானது வலுவடைந்து வந்தது. இதன் காரணமாகவே இந்துசமுத்திரப் பிராந்தியத்தின் முதன்மை நிலையாளனாகச செயற்படும் இந்தியா, தவிர்க்கவியலாத பல்வேறு நிலைப்பாடுகளின் மத்தியில் இந்த ஒப்பந்தத்தை உருவாக்கியது.

இந்தியப் பிரதமராயிருந்த ராஜிவ்காந்திக்கும், இலங்கையின் ஜனாதிபதியாய் விளங்கிய ஜே.ஆர்.ஜெயவர்த்தனாவுக்கும் இடையில், இலங்கையின் சிங்கள-தமிழ் பேசும் மக்களுக்கிடையேயான முரண்பாடுகளையும், முறுகல்களையும் தணிக்கும் நோக்குடன் உருவாக்கப்பட்ட இவ்வொப்பந்தமானது, பல்வேறு எதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் பின்னால் விபரிக்கப்படும் சில விடயங்களை உள்ளடக்கிக் காணப்பட்டது.

இலங்கையானது, பயங்கரவாதத்தை அடியோடு களைய விரும்பியதோடு, சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள், பறங்கியர் போன்ற பல்தேசிய இனங்களையுடைத்தாய நாடென்பதை ஏற்றுக்கொள்வதுடன், ஒவ்வொரு இனக்குழுவினரதும் பாதுகாப்பை உறுதிப்படுத்தவும், மொழி, கலாசாரத்தை அபிவிருத்தி செய்யும் உறுதிபூண்டுள்ளது. அத்துடன, நிர்வாகப் பிரிவுகளாக மாகாணசபைகளை அமைக்கவும், வடக்குக்கிழக்கு மாகாணங்களை ஒன்றிணைந்த மாகாணசபைப் பிரிவாகக் கணித்து ஆரம்பத்தில் செயறபடவும், இந்த மாகாண சபைகளை 31 டிசம்பர் 1987இன முன்னர் செயற்படும் வண்ணம் தேர்தல்கள் நடாத்த நடவடிக்கையெடுக்கவும், 31 டிசம்பர் 1988இன் முன்னரான ஓராண்டு காலத்தினுள் வடக்குக்கிழக்கு மாகாணங்கள் இணைந்திருக்க வேண்டுமாம் என்பதை அறிய கிழக்கு மாகாண மக்களிடையே கருத்துக் கணிப்பொன்றை நடாத்தவும், அவ்விதமான கருத்துக்கணிப்பினை மேலும் ஒத்திப்போட ஜனாதுபதிக்கு உரிமையளிக்கவும், 15ஆம் திகதி ஆகஸ்ட் மாதம் 1987ஆம் ஆண்டினுள் அவசரகாலச் சட்டததினை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் நீக்கிக்கொள்ளவும், ஒத்துக்கொள்கிறது. மேலும் இந்த ஒப்பந்தமானது, சட்டரீதியற்ற முறையில் ஆயுதம் வைத்திருபபோர் 72 மணித்தியாலங்களுக்கிடையில் ஆயுதங்களைப் படைமுகாம்களில் ஒப்படைக்கவும, தவறும் பட்சத்தில் ஆயுதக்களைவு நடாத்த நிர்ப்பந்திக்கப்படவும், பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழும் அவசரகாலச் சட்டத்தின் கீழும் கைதுசெய்யப்பட்டுக் காவலிலுள்ள வடக்குக்கிழக்கு மாகாணத்தவரை ஜனாதிபதி பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யும், ஏனையோர் மீது வழக்குத் தொடரவும் உடன்படுகிறது. மேலும், இதுவரை காலமும் ஆட்சிமொழியாயிருந்த சிங்களத்துடன் தமிழையும் ஆட்சி மொழியாக்கவும், ஆங்கிலத்தை இணைப்பு மொழியாக்கவும் இலங்கை-இந்திய ஒப்பந்தம் வகைசெய்தது. அத்துடன் இரு நாடுகளுக்குமான ஒப்பந்த நிறைவேற்றுப் பொறுப்பையும் சுட்டிக்காட்டுவதுடன், இந்தியாவின் சர்வதேச நலன்சார் அம்சங்கள் சிலவற்றை வலியுறுத்தியும் காணப்பட்டது.

இந்த ராஜீவ்-ஜே.ஆர்.உடன்படிக்கையானது பல்வேறு விமர்சனங்களுக்கும், சர்ச்சைகளுக்கும் இடந்தந்ததெனலாம். இலங்கை சிங்கள மக்களின் ஒருபாலாரும், தமிழ் பேசும் மக்களில் ஒரு பகுதியினரும் இதனை எதிர்த்தனர். ஒப்பந்தத்தின் பின்னதான அதன் செயற்பாடுகளில் பெரும்பாலோர் அதிருப்தியும், அவநம்பிக்கையும் கொண்டனர். இந்தியா, தனது பாதுகாப்பு நலன்களைக் காப்பாற்றவும், இந்து சமுத்திரப் பிராந்தியத்தில், தனது வல்லரவு நிலையை வலுப்படுத்தவும் விரும்பியதோடு, இலங்கையைப் பல்துறை நிபந்தனைகளுக்கு ஆளாக்கிவிட்டுத் தான் மட்டும் பொறுப்புகளற்ற சூழ்நிலையை ஏற்படுத்திக்கொண்டதாகப் பலதுறையினராலும் குற்றஞ்சாட்டப்பட்டது.

(தொடரும்)

# மணிபல்லவத்தில் மஹோற்சவம்

# நயினை நாக பூசணி அம்மன் பாமாலை

## ஆறாம் திருவிழா



## தமிழினத்தைக் காத்திடம்மா

நாவினிக்கும் உந்தன் புகழ்பாட
நலங்கிடைக்கும் நயினையிலே கால்பதிக்க
பாவினிற்கு அடியெடுத்துத் தருபவளும் நீயே!
பழவினைகள் போக்கி அருளுகின்ற தாயே!
கூவினிற்கும் கடல்தனத் தாண்டிவந்தே
குறை தீர்க்க கரங்கூப்பி வேண்டின்
பூவினிக்கும் தேனென அருள் தருபவளே! இப்
புவியினிலே தமிழினத்தை என்றென்றும்
காத்திடம்மா

மு.முத்துக்குமார்.

## சித்தமேல் வைத்துனது சேவை செய்குவமெம்

தலைவி நீ தாழ்த்திடத் தலை தந்தாய்
நின்னைத் தரிசிக்க நயனமீந்தாய்
தொலைவிலா நின்னருள் கேட்டிடச் செவி தந்தாய்
வாழ்த்திட வாயும் தந்தனை
அளவிலா துனைத்தொழக் கைகள் தந்தாய்
ஆவியம் சூழ்ந்துவர கால்கள் தந்தாய்
சிலைமகா மேருவை கைக்கொண்ட
அம்மையே நாகபூசணியே

எத்தொழில் செய்யினும் நின்நாமம் நெஞ்சினில்
எய்திடா பகைபிணி
எத்தினத் தாயினும் தீங்கு செய்யா நிதம்
நிலையான வீடெய்து மென்று
ஆத்தநீ அருள்மறை யாகமம் முதலான
ஐந்தெழுத்தை அறைதலின்
சித்தமேல் வைத்துனது சேவை செய்குவமெம்
அம்மையே நாகபூசணியே

த.து.ஜெகநாதன் ஐயர்

## பாத கமலமதைப் போற்றிசெய்வோம்

மாதவ மாதா மணிபல் லவத்தில்
பாதக மனிதரைப் பணிகொண் டிடுவாள்
நாதவி னோதினி நாக பூசணி
பாதக மலமதைப் போற்றிசெய்வோமே.

எஸ்.சிவாநந்தராஜா

## துயில் கொளா தெமைக் காப்பவள்

கயிலாயம் விட்டிறங்கி கத்து கடல்சூழ்
நயினைக் கரையமர்ந்து என்றும் — துயில்கொளா
எம்மைநன்றாய் காப்பவளே பெற்றோம் பெரும்பேறு
கைம்மாறு கண்டதென்ன சொல்.

சண்

# கோடி அற்புதராம் அந்தோனியாரின் கோலாகலத் திருவிழா

திருச்சபையானது காலத்துக்குக் காலம் இறைமகன் இயேசுக் கிறிஸ்து எமக்காக விட்டுச்சென்ற நற்செய்திகளின் பாதையில் செல்கின்றது.

அதற்காகத் தன்னை அர்ப்பணித்து நற்செய்தியைப் பரப்பியும் ஆட்டு மந்தைகளாக சிதறுண்டுபோன மக்களை ஒன்று கூட்டிச் சேர்த்தும், சர்வாதிகார அரசர்களால இறைமைந்தர்களுக்கு துன்பம் ஏற்பட்ட வேளைகளில் அவர்களைக் காத்தும் நற்செய்தியின் வழியாக திருமறையைக் கட்டிக்காத்தும் வருவது நாமறிந்ததே.

சத்திய வேதத்திற்காக தம் உயிரைச் சித்தம் செய்து வாழ்ந்த புனிதர்கள் இம் மண்ணுலகைவிட்டு விண்ணுலகில் இணைந்து மகாவுன்னத தினத்தை, அவர்களை மகிமைப்படுத்தும் திருநாளைக் கொண்டாடும் படியும் திருச்சபை நம்மைப் பணிக்கின்றது.

இது இறைமகன் இயேசு கிறிஸ்துவுக்குப் பின்வழியாக வரும் மரபாகியிருந்தது.

அந்தவகையில், 1231 ஆம் ஆண்டு ஜுன் மாதம் 13ஆம் நாள் திருச்சபையின் வரலாற்றில் மகத்துவம் பெற்ற நாளாகத் திகழ்கின்றது.

அன்றைய தினம் தான் புதுமைகள் பல செய்த கோடி அற்புதராம் புனித அந்தோனியார் மண்ணுலக வாழ்விலிருந்து விண்ணக இறையரசை சுவீகரித்த நாள்.

புனித அந்தோனியார் 13ஆம் நாள் வெள்ளிக்கிழமை உயிர் நீத்த போதும் மறுநாள் செவ்வாய்க்கிழமை அடக்கம் பண்ணப்பட்டார்.

புனித அந்தோனியார் 15.08.1193 அன்று போர்த்துக்கலின் த்லைநகராம் லிஸ்பன் நகரில் மரியாவின் விண்ணேற்பு நாளில் இறைசித்தததிற்கேற்ப தூய கிறிஸ்தவர்களாக வாழ்ந்த மார்த்தீன் மேரி தம்பதியர்க்கு உத்தமப் பிள்ளையாகப் பிறந்தார்.

திருமுழுக்கின் போது பேர்டினன்ட் என்னும பெயரைப் பெற்றார். சிறுவயது முதல் தேவனுக்கு ஊழியஞ்செய்ய வேண்டுமென விரும்பினார்.

எனவே 15 வயதில் புனித அகுஸ்தினார் துறவற மடத்தில் சேர்ந்தார். அங்கு கல்வி கற்று அறிவிலும், வேதாகமத்திலும் விற்பன்னராக விளங்கினார்.

இக்கால கட்டத்தில் மொரக்கோ தேசத்தில் கிறிஸ்தவர்களுக்கு எதிராகக் கலகம் தோனறியபோது பிரான்ஸிஸ்கன் சபைத துறவிகள் அங்கு வேத சாட்சிகளாக மரித்தனர்.

இதனை அறிந்து அவர் அங்கு சென்று மறைசேவையாற்ற விரும்பினார்.

ஆனால் அவருக்கு ஏற்பட்ட நோயினால் ஸ்பானியா செல்ல நேரிட்டது.

அவர் பயணம் செய்த கப்பல் புயலில் சிக்கியதால் அவரின் கப்பல் சசிசித் தீவுககுச் சென்றது. அங்கு உடல்நலம் பெற்றதும் பிரான்ஸிஸ்கன் சபையில் சேர்ந்து மறை சேவையாற்றினார்.

பிரான்ஸிஸ்கன் சபையில் ஆற்றிய உரையைத் தொடர்ந்து அங்கு முக்கிய போதகராக நியமிக்கப்பட்டார்.

அவரது போதனைகளால் மனமாற்றமடைந்தவர்கள் ஏராளம். அவரது புதுமைகளும் அநேகரை மனமாற்றம் அடையச் செய்தது.

முக்கியமாக இரவு வேளைகளில் அவர் செபிக்கும் போது அவரது அறையில் ஒரு குழந்தையின் குரலொலி கேட்பதுண்டு. அதனை அறிய பலரும் முயன்றனர்.



ஒருநாள் திறவுகோலின் துவாரத்தின் மூலம் பார்த்தபோது, புனிதரின் கையிலிருந்த திருமறை நூலில் குழந்தை இயேசு அமர்ந்திருப்பதைக் காணமுடிந்தது. இதனால் திருமகனைத் திருக்கரத்தில் ஏந்தும் பெருவரம் பெற்றார். அதனால்தான் இன்று உலக மெங்கும் எண்ணிலடங்கா கோடான கோடி மக்களின் பாதுகாவலராகப் புனிதர் விளங்குகின்றார்.

வாழ்நாளில் புதுமைகள் பல செய்த அவர் இறந்த பன்னும் புதுமைகள் செய்யத் தவறவில்லை.

புனிதர் இறந்து 32ஆண்டுகளுக்குப் பின் அவரது கல்லறை திறக்கப்பட்ட போது அவரது உடல் அழிந்திருந்தாலும் அவரின் நாக்கு அழியாது காணப்பட்டது.

அப் பரிசுத்த நாக்கு பாதுவா நகரின் பேராலயததில் அழகிய பேழையில பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது. அத்துடன் அவரின் புனித எலும்பு பிண்டங்கள் பேராலயத்துக்குள் அழகிய சிற்றாலயம் அமைக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டுள்ளது.

இன்று அந்தப் புனிதரை மகிமைப்படுத்தி அவரின் புனித நாளை கோலாகலமாகக கொண்டாடும் நாம் அவரைப் பற்றிச் சிந்திக்கக் கடமைப்பட்டுள்ளோம்.

அந்தப் புனிதரின் பாதையில் இறைமகன் இயேசுக்கிறிஸ்துவுடன் ஒன்றித்திருக்கவும் அவரைப் போன்ற தூயவர்களாக மாறவும் வேண்டியவர்களாக நாம் இருக்கின்றோம்.

புனித அந்தோனியார் போன்று எ... மால் தூய்மையுடையோராக வாழ மு... யுமா? நிச்சயமாக முடியும்.

முதலில் இறைமகன் இயேசுக்கிறிஸ்... எடுத்துரைத்த நற்செய்திகளை எமது இ... யம் ஏற்றுக்கொள்ளவேண்டும். அத... மூலம் எமது மனதை ஒருநிலைப்படுத்து... வல்லமை வந்து சேரும்.

எமது அறிவாற்றலைப் பிறருக்கு... துன்பங்களை உருவாக்குவதற்கன்றி அ... களுககு மகிழ்ச்சியை ஆறுதலை வருவி... பதற்குப் பயன்படுத்த வேண்டும்.

எமது வாயிலிருந்து உதிரும் வார்... தைகள் பிறர் மனதைப் புண்படுத்துவத... காக அன்றி அவர்களை நேசிப்பதற்கா... அமைய வேண்டும்.

எமது நாவின் மூலம் வெளிவரும் சொ... கள சுடுசொல்லாக அன்றி பிறர் சிநேக... கொண்டதாக மாறவேண்டும் இவ்வாறா... செயல்களாலே தான் இறையன்பு எம்மி... தங்கும்.

எமது வாழ்வும் பரிசுத்தம் நிறைந்... தாக மகிமை மிக்கதாக விளங்கும்.

புனித அந்தோனியார் விண்ணக வா... வையடைநது 774 ஆண்டுகளாகிவிட்ட... ஆனால் அவரது நன்நா அழியாவரம் பெற்று... விளங்குகின்றது. இது நாம் எம் கண் முன்ன... காணும் புதுமை அல்லவா?

ஆண்டவர் இயேசு கூறுகிறார் "வாய... லிருந்து வெளிவருபவை உள்ளத்திலிரு... ந்து வெளிவருகின்றன. அவையே மனித... ரைத் தீட்படுத்தும்" (மத்தேயு - 15:12...

ஆம், பொய், பித்தலாட்டம், துரோ... கம், பொறாமை, பகைமை, தூஷித்தல்... போன்ற தீய குணங்களை நாம் எம்வாழ்விலிருந்து அகற்ற வேண்டும். அவையே... எம்மைத் தட்டுப்படுத்துபவையாக இருக்கின்றன.

## நோயல்

கோடி அற்புதராம் புனித அந்தோனி... யாரின் அடிச்சுவட்டில் எமது நாவை பிறர்... சிநேகம், தயாளம், இரக்க சிந்தனை போன்ற... நற்குணங்களை வெளிப்படுத்தும் கருவி... யாகப் பயன்படுத்தி புனித அந்தோனியாரின் பாதையில் இறைமகன் இயேசுக் கிறிஸ்துவுக்கு ஏற்றவர்களாக வாழ்வோம். □

---

## களனி பல்கலை மாணவர்கள் சத்தியாக்கிரகப் போராட்டம்

(கொழும்பு)

உத்தேச பொதுக் கட்டமைப்புககு எதிர்ப்புத் தெரிவித்து களனிப் பல்கலைக் கழக மாணவர்கள் 8பேர் நேற்றுமுன்தினம சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்தச் சத்தியாக்கிரகப் போராட்டம் தொடர்ந்தும் நடைபெறுமென்றுபல்கலைக் கழக மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது பொதுக் கட்டமைப்புக்கு எதிராக தொடர்ந்தும் தாம் பல்வேறு விதமான எதிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளப் போவதாகவும் களனிப் பல்கலைக்கழக மாணவர் சங்கம் தெரிவித்துள்ளது. (ச-8)

## சிவராமைக் கொன்றவர்கள் சில தினங்களில் கைதாவர்

### குற்றப் புலனாய்வுப் பிரிவு உறுதி

(கொழும்பு)

கடத்திச் செல்லப்பட்டு படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் சிவராமின் கொலை தொடர்பான சந்தேக நபர்கள் குறித்து தகவல்கள் கிடைத்து வருவதாகவும் அவர்கள் அடுத்த சில தினங்களில் கைது செய்யப்படுவார்கள் எனவும கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சிவராமின் படுகொலை தொடர்பாக நூற்றுக்கு மேற்பட்டவர்களிடம் விசாரணைகள் நடாத்தப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டுள்ளது. இவர்களில் சிலர் தொடர்ந்து தடுத்துவைக்கப்பட்டு விசாரணை செய்யப்பட்டு வருகின்றனர்.

அவர்களிடம் நடாத்திய விசாரணைகளின் படி குறிப்பிடப்பட்ட சில வீடுகள சோதனையிடப்பட்டபோது அந்த சந்தேக நபர்கள் குறித்து முக்கிய தகவல்கள் கிடைத் துள்ளது எனவும் குற்றப்புலனாய்வுத் துறையினர் தெரிவித்துள்ளனர்.

இக் கொலை தொடர்பாக முக்கிய சந்தேக நபர்களை அடுத்த சில தினங்களில் கைது செய்ய முடியுமென்றும் குற்றப் புலனாய்வு பிரிவுப் பொலிஸார் மேலும் தெரிவததனர். (ச-8)

## திருகோணமலையில் புலிகளின் விமானத்தளம் எதுவும் இல்லை

திருகோணமலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் புதிய விமானத்தளத்தை உருவாக்கி வருவதாக வெளியான செய்திகளுக்கு ஆதாரம எதுவும் இல்லை என இலங்கை யுத்தநிறுத்தக கண்காணிப்புக் குழுப் பேச்சாளர் ஹெலன் ஓலப்ஸ்டொட்டிர் தெரிவித்துள்ளார்.

விமானத்தளம் அமைப்பதாகக் கூறப்படும் பகுதியைக் கடந்த 8ஆம் திகதியே எமது குழு சம்பூர் சென்று நேரில் பார்வையிட்டது. அங்கு அப்படியான விமானத்தளம் அமைக்கும் முயற்சிகள் ஏதுமில்லை என அவர் மேலும் தெரிவித்தார். (ச-4)

## மிருசுவிலில் அநாதரவாக இருந்த சடலம் இராணுவத்திற்கு புக்கை கட்டுபவராம்!

மிருசுவில் தேவாலய வீதியில் (றோமன் கத்தோலிக்க பாடசாலை) கடந்த வெள்ளிக்கிழமை மாலை சுடப்பட்டு அநாதரவாக இருந்த சடலம இராணுவத்திற்கும் பொலிஸாருககும் புக்கை கட்டும் பணி புரிபவருடையதாம்.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது, கண்டியைப் பிறப்பிடமாகக் கொணட இராசையா பாலகிருஷ்ணன் (வயது -40) என்பவர் அச்சுவேலிப் பத்தமேனி பகுதியில் திருமணம் புரிந்துள்ளதாகவும் இவருக்கு 4 பிள்ளைகள உள்ளதாகவும், இரண்டு பெண் பிள்ளைகள் வன்னிப் பகுதியில் சிறிய தாயாருடன் வசிப்பதாகவும் மற்றைய இரண்டு ஆண்பிள்ளைகளும் குறித்த நபரும் மனைவியுமாக அச்சுவேலி பத்தமேனி பகுதியை விட்டு விலகி மிருசுவில் பகுதியில் சிறிய குடிசை அமைத்து வாழ்ந்ததாகவும. தெரிய வருகிறது.

அதேவேளை நோ, முறிவு என்பவற்றுக்கு புக்கை கட்டும் பணியில் அவர் ஈடுபட்டதாகவும் குறிப்பாக இராணுவம் பொலிஸாருக்கே அதிகமாக புக்கை கட்டி வந்ததாகவும் அவரது மனைவி மூலம் அறியப்படுகிறது.

கடந்த வியாழக்கிழமை மாலை 4 மணியளவில் புக்கை கட்டுவதற்கு வருமாறு அவருக்குத் தொலைபேசி அழைப்பு வந்ததாகவும் அதனால் வீட்டைவிட்டு வெளியே சென்றவர் முன்னிரவு வேளை துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் பிணமாகக் காணப்பட்டதாகத் தெரிகிறது.

சடலம பொலிஸாரால் மீட்கப்பட்டு வல்வெட்டித்துறை ஊறணி வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

வல்வெட்டித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி திரு.மயிலேறும் பெருமாள வைத்திய சோதனை மேற்கொண்டார். நெஞ்சுப் பகுதியில் 4 சூடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகவும் அதில் ஒன்றின் சன்னம் உடலிலிருநது மீட்கப்பட்டதாகவும் அறியப்படகிறது.

சாவகச்சேரி மாவட்ட நீதிபதி சு.பால சுப்பிரமணியத்தின் உத்தரவின் பேரில் வைத்தியசோதனை மேற்கொள்ளப்பட்டது. சடலம் தொடர்ந்தும் வல்வெட்டித்துறை வைத்தியசாலை பிரேத அறையில் உள்ளது. (து-101)

## சிறுவர் உரிமைகளைப் பாதுகாக்க ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

### அனைத்துத் தரப்பினருக்கும் வேண்டுகோள்!

சிறுவர்களை வேலைக்கு அமர்த்தும் தரகர்களின் நடவடிக்கைகள் சமூக விரோதச் செயலாகக் கருதப்பட்டு அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது மிகவும் அவசியமானது என தோட்டக் கிராமியக் கல்வி நிறுவனம் தெரிவித்துளளது.

சிறுவரை வேலைக்கு அமர்த்துவதற்கு எதிரான சர்வதேச தினம் நேற்றாகும். இதனையொட்டி தோட்டக் கிராமிய கல்வி நிறுவனம் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மலையக சமூகத்தில் சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவதன் காரணமாக சிறுவரின் அடிப்படை உரிமையான கல்வி மறுக்கப்படுவதுடன், மோசமான பாலியல் வல்லுறவுக்கும் சிறுவர்கள் உட்படுத்தப்படுவதாகவும், இந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

இதனைத் தடுக்கும் நடவடிக்கைகளில் சகல தரப்பினரும் இணைந்து செயற்பட வேண்டும் என்றும் இந்த அமைப்பின தலைவர் மைக்கல் யோக்கின் அவ் அறிக்கையில் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ந-9)

# 2009இல் ஆசிரியர் தேவைக்கேற்பவே 2006இல் கல்வியியற் கல்லூரிகளில் அனுமதி

(கொழும்பு)

2009 ஆம் அண்டில் பாடசாலைகளுக்குத தேவையான ஆசிரியரின் எண்ணிக்கைக் கேற்பவே 2006ஆம் கல்வியாண்டிற்காக கல்வியற் கல்லூரிகளுக்கு மாணவர்கள் தெரிவு அமையும் என்று கல்வியமைச்சின் செயலாளர் கலாநிதி தாரா டி மெல் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆட்சேர்ப்பு முறை 'இசற்' புள்ளிகளின் அடிப்படையில நடைபெறும். சகல பயிற்சி நெறிகளுக்கும் தேசிய மட்டத்தில் 50 சதவீதமும் தெரிவு செய்யப்படும்.

கஷ்டப் பிரதேச மாவட்டங்களாக 15 மாவட்டங்கள் அறிவிக்கப்பட்டு பெயர்ப்பட்டியல் வெளியிடப்பட்டுள்ளது.

மாத்தளை, நுவரெலியா, அம்பாநதோட்டை, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா, திருமலை, அம்பாறை, புத்தளம், அனுராதபுரம், பொலனறுவை, பதுளை, மொனாரகலை ஆகிய 15 மாவட்டங்களே கஷ்டப பிரதேச மாவட்டங்களாக அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் கல்வியமைச்சின் செயலாளர் தாரா டி மெல் தெரிவித்தார்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டம் தொடர்ந்தும் இப்பட்டியலில் இடம்பெறாமல் தவிர்க்கப்பட்டு வருகிறது. கல்வியில் பின்தங்கிய மாவட்டமாக இம்மாவட்டம் கடந்த வருடம் முதல் ஏற்றுக் கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ு-2)

# சுனாமி நிவாரணத்தில் முறைகேடு; 15 அதிகாரிகள் இடை நிறுத்தம்

(கொழும்பு)

சுனாமி நிவாரண உதவிகளில் இடம் பெறும் ஊழல்கள் குறித்து முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றவுடன் விசாரணைகளை நடாத்துமாறு பணிப்பரை விடுக்கப்பட்டுள்ளதாக சமூக நல அமைச்சா சுமேத ஜெயசேன தெரிவித்துள்ளார்.

அனேகமான குற்றச்சாட்டுக்கள் கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கு எதிராகத் தெரிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

சில ஒழுங்கீனங்களுக்கு மாவட்ட செயலாளர்களும் பொறுப்பாக இருப்பதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாரிய அளவில் மோசடிகள் இடம்பெற்றதாக இதுவரை முறைப்பாடு ஏதும் கீடைக்கவில்லை என்றும் அமைச்சர் சுமேச ஜெயசேன தெரிவித்தார்.

பிரதி அமைச்சர் சந்திரசேன இது பற்றி கருத்துத் தெரிவிக்கையில்,

குற்றவாளிகளாகக் காணப்படும் அதிகாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப் படும்.

ஒழுங்கீனங்களில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட 15 அதிகாரிகள் சேவையிலிருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளார்கள் என்றார். (ு-9)

## பட்டினிக்கெதிரான நிறுவனம்

# காரைநகர் கடற்றொழிலாளர்களுக்கு தொழில் உபகரணங்களை வழங்கியது

(காரைநகர்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட காரைநகர் பிரதேச கடற்றொழிலாளர்களிற்கு பட்டினிக்கெதிரான நிறுவனம் பல்லாயிரம் ரூபா பெறுமதியான கடற்றொழில் உபகரணங்களை கடந்த புதன்கிழமை அன்பளிப்பாக வழங்கியுள்ளது.

காரைநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தினூடாக 264 குடும்பங்களுக்கே இவ் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது.

வியாவில் கடற்றொழிலாளர் சங்கம், கல்லந்தாழ்வு கடற்றொழிலாளர் சங்கம், மருதபுரம் கடற்றொழிலாளர் சங்கம், அம்பாள் கடற்றொழிலாளர் சங்கம், சிவகௌரி கடற்றொழிலாளர் சங்கம், நீலங்காடு கடற்றொழிலாளர் சங்கத்தினைச் சேர்ந்த கடற்றொழிலாளர்களுக்கே இவ் உபகரணப பொருட்கள் வழங்கப்பட்டுள்ளன.

ஒவ்வொரு குடும்பத்திற்கும் தலா 40 ஆயிரம் ரூபாவிற்கும் மேற்பட்ட உபகரணங்கள் வழங்கப்பட்டதோடு காரைநகர் கடற்றொழிலாளர் சமாசத்தினூடாக மொத்தமாக 90 இலட்ச ரூபாய்க்கு மேற்பட்ட பெறுமதியான பொருட்களும் வழங்கப்பட்டுள்ளன.

இவ் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வில் பட்டினிக்கெதிரான நிறுவன இணைப்பு முகாமையாளர், கடற்றொழில் பரிசோதகர், காரைநகர் பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர், கடற்தொழில் சமாசத் தலைவர் ஆகியோர் கலந்துகொண்டனர். (ு-246)

## விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆனந்த வித்தியாலயத்திற்கு யாழ்ப்பாணம் இலங்கை வங்கி மேற்றரக் கிளையால் மாணவர்களின் விளையாட்டுத் திறன் விருத்திக்கு விளையாட்டு உபகரணங்கள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. (ு)

## அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்)

புனித ஜேம்ஸ் ஆண்கள் மகாவித்தியாலயத்திற்கு முகமாலையைச் சேர்ந்தவரும் சுவிஸ் நாட்டில் வசித்து வருபவருமான த.றமேஸ் தம்பதியினர் 17ஆயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்களையும், குருநகர் சென்ஜேம்ஸ் கல்விக்கழகம் ஊடாக பிரான்ஸ பழைய மாணவர் சங்கத்தினர் 45ஆயிரம் ரூபாவினை கழுத்துப்பட்டிக்காகவும் அன்பளிப்புச் செய்துள்ளனர். (ு)

## சத்யசாயி சேவா நிலையம் உதவி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஆனந்த வித்தியாலய மாணவர்களுக்கு சத்யசாயி சேவா நிலையத்தினரால் சத்துணவிற்கு பண உதவி வழங்கப்பட்டு வருகின்றது.

இந்நிலையம் நீண்டகாலமாக இறைக்கப்படாதிருந்த கிணற்றினை இறைத்தும் பாடசாலை சுற்றாடலை சிரமதான மூலம் துப்பரவு செய்தும் கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ு)

## இளைஞனை மோதிய மோ.சைக்கிள் மறைவு

(காரைநகர்)

மிகவேகமாக வந்து இளைஞனை மோதிய மோட்டார் சைக்கிள் ஒன்று தரித்து நிற்காது மறைந்துள்ளது.

இதனால் படுகாயமடைந்த் இளைஞர் காரைநகர் கிராமிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் காரைநகர் வலந்தலைச் சந்தியில் இடம் பெற்றுள்ளது.

இச்சம்பவத்தின் போது காரைநகர் மருதபுரத்தைச் சேர்ந்த கந்தசாமி கேதீஸ்வரன் என்பவரே படுகாயமடைந்துள்ளார்.

சம்பவ இடத்தில் பொதுமக்கள் எவரும் அச்சமயம் இல்லாததால் மோதிய மோட்டார் சைககிளை அடையாளம் காணமுயடிவில்லை என காயமடைந்த இளைஞனின் உறவினர்கள் தெரிவித்துள்ளனர். (ு-246)

## நால்வர் திருவுருவச் சிலைகள் பவனி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் யாழ்.குடாநாடு முழுவதும் மாதத்தில் ஒரு நாள் நால்வர் திருவுருவச்சிலைகள் பன்னிருதிருமுறைச் சுவடிகள் வீதி உலாவாக எழுந்தருளச் செய்து வருகின்றது.

அத்தோடு மாதம் ஒரு திருமுறை முற்றோதல் என்ற வகையில் வருடம் முழுவதும் பன்னிரு திருமுறையும் முற்றோதி வருகின்றனர்.

அந்த வகையில் முதலாந் திருமுறை யாழ்ப்பாணம் நீராவியடி ஸ்ரீ ஜெய வீரகத்தி விநாயகர் ஆலயத்திலும், இரண்டாந் திருமறை யாழ்ப்பாணம் சத்திரத்து ஸ்ரீ ஞான வைரவர் தேவஸ்தானத்திலும் நிறைவு செய்து நாளை செவ்வாய்கிழமை காலை 8.00 மணிக்கு ஆலயப் பூசையைத் தொடர்ந்து நாலவர் சிலைகள் பன்னிரு திருமுறை சுடிகள் வீதி உலாவாக யாழ்ப்பாணம் வில்லூன்றிப் பிள்ளையார் தேவஸ்தானத்துக்கு எழுந்தருளி மூன்றாந் திருமுறை முற்றோதல் ஆரம்பமாகும். (ு)

## வீதி சேதம்

(பொன்னாலை)

சங்கானை தொட்டிலடி மழவை வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றது.

கடந்த 25 வருடங்களுக்கும் மேலாக திருத்தப்படாதிருக்கும் இவ் வீதியை விரைவில் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இவ் வீதியால் மழைக்காலம் நெருங்கியதும் போக்குவரத்து செய்யமுடியாத துர்ப்பாக்கிய நிலை காணப்படுவதாகப் பொதுமக்கள் தரப்பில் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ு-49)

# இலங்கையின் அரசியல் குழப்பத்தை இந்தியா உன்னிப்பாக கவனிக்கும்

## வெளிவிவகார செயலாளர் சியாம் சரண் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்ப நிலை குறித்து தீவிரமாக அவதானித்து வருவதாக இந்திய வெளிவிவகாரச் செயலாளர் சியாம் சரண் தெரிவித்துள்ளார்.

இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர் சிங்குடனான கொழும்பு பயணத்தை நிறைவு செய்த பின்னர் டில்லிக்குச் செல்லும் விமானத்தில் ஊடகவியலாளர்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளுடனான ஆழிப் பேரலை மீளமைப்புக்காக இலங்கை அரசு மெற்கொள்ள உள்ள பொதுக்கட்டமைப்பு தொடர்பாக சிச்கலான அரசியல் சூழல் நிலவுகிறது.

இச்சிக்கலை அந்நாடு எவ்வாறு எதிர்கொள்கிறது என்பது குறித்து உன்னிப்பாக அவதானித்து வருகிறோம் என்றார்.

அரசியல் வேறுபாடுகளைக் கடந்து அனைத்துத் தரப்பினரும் மீண்டும் வன்முறைச் சூழலுக்குள் நாட்டை கொண்டு செல்லாத நிலை ஏற்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளனர்.

அரசுடனான இருதரப்பு வாத்தக உறவை வலுப்படுத்தும் வகையிலான வர்த்தக ஒப்பந்தம் இவ் ஆண்டு இறுதிக்குள் கையெழுத்தாகும் என்று எதிர்பார்க்கிறோம்.

இலங்கைக்குப் பயணம் மேற்கொண்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங், எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்கள் ஆகியோரையும் சந்தித்துப் பேசினார் என அவர் கூறினார். (ச-4)

## சுற்றுலாத்துறை பிரதியமைச்சராக பைசல் முஸ்தபா!

(கொழும்பு)

சுற்றுலாத்துறை பிரதியமைச்சராக பைசல் முஸ்தபா கடந்த வெள்ளிக்கிழமை பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் ஜனாதிபதி முன்னிலையல் இவர் பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

இந்தப் பதவிப் பிரமாண வைபவத்தின் போது அமைச்சர்கள் உட்பட பல முக்கிஸ்தர்களும் கலந்துகொண்டனர். (ு-8)

# மாமுனை - பளைக்கு இடையில் ஆற்றுக்கு குறுக்காக பாதை

## புதனன்று அங்குரார்ப்பணம்

(திருநெல்வேலி)

பளைப் பகுதிக்கும் வடமராட்சி கழக்குப் பகுதிக்கும் இடையில் நேரடி இணைப்பை எறபடுத்தும் நோக்கில் மாமுனைக்கும் பளைக்கும் இடையில் ஆற்றிற்கு குறுக்காக பாதை ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இவ் வீதியை அமைக்கும் பணி விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளது, எதிர்வரும் 15ஆம் திகதி புதன்கிழமை இப்பாதையமைக்கும் திட்டத்தின் அங்கரார்ப் பண வைபவம் இப் பகுதி பிறப்பு இறப்பு வவாகப் பதிவாளர் தலைமையில் இடம்பெற வுள்ளது.

இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், மருதங்கேணி உதவி அரச அதிபர் ரி.ஜெயசீலன் மற்றும் விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

மாமுனைப் பகுதியலிருந்து தற்போது பளைப் பகுதிக்குச் செல்ல 12 கிலோமீற்றர் தூரம் செல்ல வேண்டி உள்ளது. உத்தோசத் திட்டம் பூர்த்தியானால் 2 கிலோ மீற்றர் தூரம் மட்டுமே செல்லவேண்டி ஏற்படும். (ு-43)

## தேசிய சேமிப்பு வங்கியில் புதுக்கணக்கு அறிமுகம்

தேசிய சேமிப்பு வங்கியினர் எதிர்வரும் 18ஆம் திகதி **NSB XL** எனும் புதிய கணக்கு ஒன்றை அறிமுகம் செய்து வைக்கவுள்ளனர்.

இக்கண்க்கை குறைந்தது **25000/=** ரூபாவுடன் ஆரம்பிக்கமுடியும். இக்கணக்கை தொடர்ந்து பேணிவருபவர்களுக்கு சீட்டிழுப்பு மூலம் பரிசுகளும் மற்றும் பல சலுகைகளும் வழங்கப் படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (து-104)

## புதிய நிர்வாகிகள் தெரிவு

(கற்கோவளம்)

பருத்தித்துறை சித்திவிநாயகர் வித்தியாலய அபிவிருத்திச் சங்கப் பொதுக்கூட்டம் கடந்த மாதம் 21ஆம் திகதி பாடசாலை மண்டபத்தில் அதிபர் இ.நாகேந்திரராசா தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தெரிவு செய்யப்படடவர்கள்: தலைவராக இ.நாகேந்திரராசா, செயலாளராக த்புஸ்பராசா, பொருளாளராக ந.சிவலிங்கம் ஆகியோர் தெரிவு செய்யப் பட்டனர்.

நிர்வாக உறுப்பினர்களாக, கா.விஜயகுமார், வே.செல்வராசா, கோ.கமலாதேவி. ச.செல்வக்குணசந்திரன், ச.சந்திரவதனா, க.பத்திமனோகரன் மற்றும் ஜெயகாந்தன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டனர். (து-104)

## வருடாந்த திருவிழா

(பொன்னாலை)

பண்டத்தரிப்பு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த திருவிழா கடந்த 4ஆம் திகதி சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

இன்று காலை 7 மணிக்கு திருப்பலிப் பூசையும் இதனைத் தொடர்ந்து திருச் சொருப பவனியும் இடம்பெறவுள்ளது.

பண்டத்தரிப்பு பங்குத் தந்தையார் ம.பெ. ஞானரத்தினம் அடிகளார் திருப்பலிப் பூசையை நிறைவேற்றுவார். (ு-19)

## படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு - குறிகட்டுவான் படகுச் சேவை உற்சவ காலத்தில் இரவு 7.00 மணி வரை இடம்பெறுமென படகுச் சேவைச் சங்கம் அறிவித்துள்ளது. (அ)

# இன்று ஒரு தகவல்

## ஞானம்

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருக்கு ஒரு ராணி. அவர்களது அரண்மனைக்குப் பெரிய பெரிய ஞானிகள் எல்லாம் வருவது வழக்கம். அவர்களுடைய உபதேசங்களையெல்லாம் அந்த ராணி தொடர்ந்து கேட்டுக் கொண்டிருந்தாள். அதன் விளைவாக அவளும் ஒரு ஞானி ஆகிவிட்டாள். ஞானி மட்டுமல்ல தன்னுடைய உருவத்தை மாற்றிக்கொண்டு ஆகாயத்தில் பறக்கும் சக்தியும் அவளுக்குக் கிடைத்துவிட் டது. நினைத்தால் பறக்கலாம். அப்படிப்பட்ட சக்தி.

ராஜா உடனே ராணியிடம் போனார். "இதோ பார்! நானும் உன்னை மாதிரியே ஞானி ஆகவேண்டும். எனக்கு ஏதாவது உபதேசம் செய்" என்றுகேட்டுக் கொண்டார். "நீங்கள் ஞானி ஆகவேண்டுமென்றால் எல்லாவற்றையும் பார்ப்பதற்குத் தயாராக இருக்க வேண்டும். எல்லாவற்றையும் விட்டு விடும் அளவுக்கு வைராக்கியம் உங்களுக்கு இன்னும் வரவில்லை என்றார் ராணி. ராஜா பேசாமல் இருந்துவிட்டார்.

கொஞ்சக் காலம் ஆனது! அந்த ராஜா காட்டுக்குப் போய்த் தவம் செய்ய ஆரம்பித்தார். ஆனால் ராணிக்கு அதில் இஷ்டமில்லை. அதனால் சம்மதிக்கவில்லை. ராஜா பார்த்தார். அவ ருக்கா வழிதெரியாது? அவர் சொல்லாமல் கொள்ளாமல் ஒரு நாளிரவு புறப்பட்டு காட்டுக்குப் போய்விட்டார்.

ராணி பார்த்தார்! அதுதான் ஆகாயத்தில் பறக்கும் சக்தி அவருக்கு ஏற்கனவே கிடைத்திருக்கிறதே! இளம் முனிவர் மாதிரி தனது உருவத்தை மாற்றிக்கொண்டு காட்டுக்குப் புறப் பட்டுச் சென்றார். ராஜா எங்கே இருக்கிறார் என்று தெரிந்தது . நேராக ராஜாவுக்கு முன்னால் போய் இறங்கினார். இந்த இளம் முனிவர் அதுதான் அந்தராணி. ராஜா தன் எதிரில் இருந்த இளம் முனிவரைப் பார்த்தார் வணங்கினார்.

"நான் நீண்டகாலமாகத் தவம் செய்கிறேன்.ஆனால் எனக்கு இன்னும் மன நிம்மதி கிடைக்கவில்லை. தாங்கள தான் அருள் புரிய வேண்டும்" என்றார். அதற்கு அந்த இளம் முனிவர் "எல்லாவற்றையும் துறக்க வேண்டுமென்று உங்கள் மனைவி ஒரு நேரம் உபதேசித்தாரே! அதன் பிரகாரம் எல்லா வற்றையும் விட்டு விட்டீர்களா?'' என்று கேட்டார். "எல்லாவற் றையும் விட்டுவிட் டேன். இன்னும் இந்த ஆச்சிரமத்தைத் தான் துறக்கவில்லை'' என்று சொல்லிக்கொண்டே அந்த ராஜா ஆச்சிரமத்தில் இருந்த ஒவ்வொரு பொருளாக எடுத்து அக்கினியில் போட்டார். "இப் போது போடுகிறீர்களே இந்தப் பொருட்கள் எல்லாம் உங்களுக் குச் சொந்தம் இல்லையே! இவை யாவும் பிரகிருதிக்கு அல்லவா சொந்தம்'' என்றார் இளம் முனிவர்.

"சரி...! அப்படியென்றால் எனது உடம்பை நான் துறக்கின்றேன்" என்றார் ராஜா. இப்படிக் கூறிவிட்டு நெருப்பில் குதிக்கப் போனார். இளம் முனிவர் ராஜாவை உடனே தடுத்து நிறுத்தினார். "உடம்பும் உங்களுக்குச் சொந்தமில்லையே அதெல் லாம் பஞ்சபூதங்களுக்கு அல்லவா சொந்தம்'' என்றார்.

ராஜா யோசித்தார். "அப்படியென்றால் எனக்கு என்னதான் சொந்தம்?" என்று கேட்டார். உங்கள் அகங்காரம் தான் உங்களுக்குச் சொந்தம். நீங்கள் துறக்க வேண்டியது அதைத் தான். அதை விடுங்கள் முதலில்.அது உங்களிடம் இருப்பதனால் தான் "இந்த உலகமே உங்களுக்குச் சொந்தம் என்று தோன்றுகிறது" என்று இளம் முனிவர் உருவத்திலிருந்த ராணி சொன்னார். உடனே "இதோ என்னிடம் உள்ள அகங்காரத்தை விட்டு விட்டேன்" என்றார் ராஜா.அதன் பின்புதான் ராஜாவும் ஞானி ஆனார். ராணிக்குக் கிடைத்தது போன்ற சித்தி அவருக்கும் கிடைத்தது.

இந்தக் கதையை மிகவும் சீரியஸாக ஒருவரிடம் சொல்லிக் கொண்டிருந்தேன். உடனே அவர் சொன்னார் "சித்தியடைய வேண் டும் என்பதற்காக அந்த ராஜா அவ்வளவு தூரம் கஷ்டப்பட்டிருக் கிறார். நான் கூட சித்தியடைந்திருக்கிறேன். ஆனால் அவ் வளவு கஷ்டப்படவில்லை'' என்றார். "உங்களுக்கு சுலபமாகச் சித்தி யடைந்ததற்கு யார் காரணம்?" என்று கேட்டேன். "எங்கள் அப்பா தான் காரணம். இரண்டாவதாக ஒரு கல்யாணம் செய்தார். உடனே சித்தி வீட்டுக்கு வந்துவிட்டார்.எனக்கு சித்தி கிடைத்த காரணம் இதுதான்" என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## அடிக்கல் நாட்டுவிழா

(மருதங்கேணி)

அச்சுவேலி தனியார் சிற்றூர்திச் சங்க அலுவலகத்திற்கான மினிபஸ் தரிப்பிடக் கட்டடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழா கடந்த வெள்ளிக்கிழமை நண்பகல் நடைபெற்றது.

அச்சுவேலி தனியார் சிற்றூர்திச் சங்கத் தலைவர் சி.தர்மகுலசிங்கம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில், யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் அடிக்கல் நாட்டி வைத்தார்.

இவ்விழாவில் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் க.பத்மநாதன், யாழ்.மாவட்ட அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் கண்ணன், அச்சுவேலி அரசியல்துறைப் பொறுப்பாளர் குபேரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ற-35)

## யாழ்.மாவட்டத்தில் சேவையில் ஈடுபடுவதற்கு கடற்றொழில் பரிசோதகர்கள் பற்றாக்குறை

(மருதங்கேணி)

யாழ்.மாவட்டத்தில் கடற்றொழில் திணைக்களத்தில் கடற்றொழில் பரிசோதகர் பற்றாக்குறையால் சுனாமி அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களுக்கான நிவாரணப் பணிகள் தாமதம் அடைந்து வருவதாக கடற்றொழிலாளர்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் 15 கடற்றொழில் பரிசோதகர்கள் கடமையாற்ற வேண்டிய நிலையில் 7 கடற்றொழில் பரிசோதகர்கள் மட்டுமே கடமையாற்றி வருகின்றனர்.

வடமராட்சி வடக்கு,வடமராட்சி கிழக்குப் பகுதிகளே சுனாமி அனர்த்தங்களால் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்ட பகுதிகளாகும். தொண்டமனாறு தொடக்கம் சுண்டிக்குளம் வரையான பகுதிகளில் இரு கடற்றொழில் பரிசோதகர்களே கடமையில் ஈடுபட்டுள்ளனர்.

அரசினால் வழங்கப்படும் நிவாரண்ங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் நிவாரணங்கள் மற்றும தற்காலிக வீடுகள், நிரந்தர வீடுகள், முகாம்களில் வாழும் மக்களின் பிரச்சினைகள், நீர்விநியோகம், மலசலகூட வசதி போன்றனவற்றைக் கண்காணித்தல் உட்பட இன்னோரன்ன வேலைகளுடன், கடற்றொழில் அமைச்சுக்கு அவ்வப்போது புள்ளி விபரங்கள் அனுப் புதல் போன்றனவும் இப் பரிசோதகர்களாலேயே மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

ஆகவே வடமராட்சி வடக்கு,கிழக்குப் பகுதிகளுக்கு மேலதிகமாக கடற்றொழில் பரிசோதகர்களை நியமித்து அவ்வப் பகுதியில் பாதிக்கப்பட்ட கடற்றொழிலாளர்களின் அபிவிருத்திக்கு உதவுமாறு சம்பந்தப்பட்டவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ற-35)

## தமது தலைவிதியை தாமே தீர்மானிக்கும் அடுத்தகட்ட வரலாற்று நகர்வுக்கு தமிழ்மக்கள் தயாராகி விட்டனர்

### சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டுமென்கிறது பல்கலை ஊழியர் சங்கம்

(யாழ்ப்பாணம்)

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் திறக்கப்படட சமாதானக் கதவுகளை நிரந்தரமாகவே மூடுவதற்கான தீர்க்கமான முயற்சியில் தற்போது சிங்கள பௌத்த பேரினவாதம் இறங்கியுள்ளது.

இந்நிலையில், தமிழ்த்தேசிய இனத்தினது வாழ்வுரிமையைப் பேணுவதற்காக தமிழ் மக்களின அரசியல் அபிலாஷைகளை சர்வதேச சமூகம் புரிந்துகொண்டு அதனைப் பெற்றுக்கொடுக்க இலங்கை அரசாங்கம் மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டும்.

இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக ஊழியர் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைத் தீவில் தமிழரின் தாயகப் பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை நிறுவுவதில் ஆரம்பித்து அரசிற்கும் தமிழர் தலைவர்களுக்கும் இடையில் காலத்துக்குக் காலம் ஏற்பட்ட ஒப்பந்தங்களை நடைமுறைப் படுத்தாது கிழித்தெறிவதற்கான அழுத்தங்களைப் பிரயோகிப்பதில் தொடர்ந்து வெற்றிகண்ட சிங்கள பௌத்த பேரினவாதம் இன்று மீண்டும் ஒரு கொடூர நாடகத்தை அரங்கேற்ற ஆரம்பித்துள்ளது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் திறக்கப்பட்ட சமாதானக் கதவுகளை நிரந்தரமாகவே மூடுவதற்கான தீர்க்கமர்ன முயற்சியில தற்போது சிங்கள பௌத்த பேரினவாதம் இறங்கியுள்ளது.

இயற்கை அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கான மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்கு அவசியமான பொதுக்கட்டமைப்பை ஏற்படுத்தக் கூட தயாரில்லாத இப் பேரினவாதம் மறுக்கப்பட்ட தமிழர் உரிமைகளை வழங்குவதற்கு முன்வருமென சுயசிந்தனையுடைய எவருமே இனிமேலும் கருதமுடியாது.

இலங்கை அரசும் அதில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பியும், பௌத்த குருமாரின் ஹெல உறுமய போன்ற அமைப்புக்களும் பேரினவாதக் கோட்பாடுகளால் இறுக்கமாக ஒன்றுடன் ஒன்று பிணைக்கப்பட்டவையே. தமிழ் மக்களின் இருப்பை இல்லாது ஒழிக்க அவர்கள் கையாளும் தந்திரோபாயங்கள் தான் வேறுபடுகின்றன. தான் மிகுந்த அழுத்தத்தில் இருப்பதாகவும் அதற்கு மத்தியிலும் பொதுக்கட்டமைப்புக்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடத் தயாராகி வருவதாகவும் ஜனாதிபதி கூறுவது காலத்தை இழுத்தடிக்கும் வஞ்சக நோக்குக்கொண்ட தந்திரோபாயமாகும். இந்தக் கால இழுத்தடிப்பு சிங்கள பௌத்த பேரினவாதத்திற்கு மேலும் வலுச்சேர்ப்பதற்கானதாகும்.

தமிழ் மக்களுக்குள்ள அடிப்படை மனித உரிமைகளைப் புறந்தள்ளி, துவம்சம் செய்வதற்காக சிங்கள பௌதத பேரினவாதம் கடந்த சில நாட்களாக அராஜக செயற்பாடுகளில் முனைப்பாக இறங்கியுள்ளது. அடுத்துவரும் நாட்களில் இச்செயற்பாடுகள் உச்சம் பெறுவதற்கான சாத்தியக்கூறுகள் தெளிவாகத் தென்படுகின்றன.

இத்தருணத்தில் எமது தேசிய விடுதலைப் போராடடத்தை வழிநடத்தும் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் தமிழ் மக்களின் இழந்த இறைமையை மீட்டு எடுப்பதற்கான தீர்க்கமான முடிவினை எடுக்கும் காலம் வந்துவிட்டது என தமிழ் மக்களாகிய நாம் கருதுகின்றோம். தமிழ் மக்களின் தலைவிதியை தமிழ் மக்களே தீர்மானிக்கின்ற அடுத்தகட்ட வரலாற்று நகர்விற்கு தமிழ் மக்கள் தயாராகிவிட்டார்கள் என்பதை சர்வதேசம் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, தமிழ்த்தேசிய இனத்தினது வாழ்வுரிமையைப் பேணுவதற்கான தமிழ் மக்களது அரசியல் அபிலாஷைகளை சர்வதேச சமூகம் புரிந்து கொண்டு இலங்கை அரசாங்கத்தின் மீது பொருத்தமான அழுத்தங்களைப் பிரயோகிப்பதன் மூலம் சர்வதேச சமூகம் தமிழ் மக்களது கௌரவத்தையும், சுதந்திரத்தையும் உறுதிசெய்வதற்கான செயற்பாடுகளை மேற்கொள்ளும் என நாம் எதிர்பார்க்கின்றோம் என்றுள்ளது. (ற)

## மாகாண மட்ட எல்லே போட்டி

(மருதங்கேணி)

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் 16 வீரர்களில் 10 வீரர்களுக்கு எல்லே மாகாணப் போட்டிக்கு பங்குபற்றுவதற்கு அனுமதி கிடைத்துள்ளது. மிகுதி 6 பேருக்கு அனுமதி கிடைக்காததால் மிகுதி 6பேரும் ஐக்கிய விளையாட்டுக்கழக அங்கத்தவர்களையும் இணைத்து கடந்த வெள்ளிக்கிழமை காலை 7.30மணியளவில் அம்பாறைக்கு செல்லவிருந்த மினி பஸ்ஸை மறித்துப் போராட்டத்தில் குதித்தனர்.

அரச அதிகாரிகள் பாரபட்சமான முறையில் நடந்துள்ளதாக இவர்கள் கோஷமிட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இச்சம்பவம் தொடர்பாக விளையாட்டுத்துறையினருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் சமூகம் கொடுத்து போராட்டத்தில் ஈடுபட்டோருடன் கலந்துரையாடி நிலைமையை சுமுகமாக்கியதுடன், இரு நாட்களில் சுமுகமான தீர்வைப் பெற்றுத் தருவதாக உறுதி அளித்ததைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தைச் சேர்ந்த 10பேரும் நல்லூர்ப் பிரதேசத்தில் 5பேர்,கோப்பாய் பிரதேசத்தில் 5பேருமாக 20 பேரும் அம்பாறையில் நடைபெறும் மாகாண மட்டப் போட்டிக்குச் சென்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ற-35)

## 35000 மெ.தொன் சிறு ஏற்றுமதிப் பொருட்கள் 2010இல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகும்

சிறு ஏற்றுமதி பயிர்த்திணைக்களம் 2010ஆம் ஆண்டளவில் 6 ஆண்டு திட்டத்தின் கீழ் 35ஆயிரம் மெற்றிக்தொன் சிறு ஏற்றுமதிப் பொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யத் திட்டமிட்டுள்ளது.

தற்போதைய நிலைமைகளுடன் ஒப்பிடுகையில் இது 72 சதவீத அதிகரிப்பாகும்.

வெற்றிலை உட்பட 10 வகையான சிறு ஏற்றுமதிப் பொருட்களை பயிர்செய்வதறகென மேலும் 15 ஆயிரம் ஹெக்ரேயர் காணிகளைப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளதாக திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி விஜயானந்த வீரசிங்க தெரிவித்துள்ளார்.

பயிர் வகைகளைத் தேர்ந்தெடுத்தல், இயந்திர உபகரணங்களை வழங்குதல், சந்தை வாய்ப்புக்களை ஒருங்கிணைத்தல் போன்றவற்றுக்கும் விவசாயிகளுக்கு திணைக்களம் உதவிகளை வழங்கவுள்ளது. (ற-9)

## 8 சதவீத வளர்ச்சியை எட்ட அரச நிறுவனங்கள் மறுசீரமைப்பு

(கொழும்பு)

8 சதவீத பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கு வழிவகுக்கும் விதத்தில் சில அரச நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டியிருக்கின்றது என நிதியமைச்சர் கலாநிதி சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

மிலேனிய அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு தற்போதைய 5 சதவீத பொருளாதார வளர்ச்சி போதுமானது அல்ல என்று குறிப்பிட்டார்.

கடந்த வியாழக்கிழமை சர்வதேச விளம்பர நிறுவனத்தின் மாநாட்டில் உரை நிகழ்த்திய போதே அமைச்சா இந்தக் கருத்துக்களைத் தெரிவித்தார்.

ஆளும் கூட்டணி அரச தனியார் துறைகள் பொருளாதார வளாச்சியில் பின்னிப் பிணைந்து ஆக்கபூர்வமாகப் பணியாற்றக்கூடிய கலப்புப் பொருளாதாரத்தை விரும்புகின்றது என அமைச்சர் தெரிவித்தார்.

மறுசீராக்கல் என்பது தனியார் மயப்படுத்தல் அல்ல. அரசதுறையை காலத்தின் தேவைக்கு ஏற்றவாறு நவீன செயல்திறன் வாய்ந்த முகாமைத்துவ அமைப்பைக் கொண்டதாக மாற்றியமைப்பது தான் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (அ-9)

முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர் - குறள்

வலம்புரி

# ஜே.வி.பியினரை ஜனாதிபதி தூக்கி எறிவாரா ?

ஜனாதிபதிக்கும் ஜே.வி.பிக்கும் இடையிலான முறுகல்நிலை வலுவடைந்து வருகின்றது.

அரசியலில் இருந்து விலகப்போவதாக அடிக்கடி பயமுறுத்தி வந்த ஜே.வி.பி இப்போது கிரந்தம் முற்றி பௌந்திரம் ஆக்கிய கதையாக அரசியலில் இருந்து விலகுவதென்ற பயமுறுத்தலை உச்சப்படுத்தியுள்ளது.

இந்நாட்டின் இன ஒற்றுமைக்கு குந்தகம் விளைவிக்கும் ஒரு கட்சியுடன் கூட்டுவைத்துக் கொண்டமை ஜனாதிபதிவிட்ட முதற்தவறாகும் ஆட்சியைக் கைப்பற்றவேண்டும், ஐக்கிய தேசியக்கட்சியை ஆட்சியில் இருந்து வீழ்த்தவேண்டும் என்ற ஒரேகாரணத்திற்காகவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்ந்தார்.

விடுதலைப் புலிகளுடன் அரசு மேற்கொண்ட சமாதான முயற்சிகளை கடுமையாக எதிர்த்த ஜே.வி.பியுடன் கூட்டுச்சேர்வது, ஆட்சியமைப்பதற்கு மட்டும் உதவுமே ஒழிய நாட்டில் நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்தவோ அன்றி பல்லின மக்களும் ஒற்றுமையாக வாழவோ வழிசமைக்கமாட்டாது.

இந்த உண்மை உலகறிந்ததாக இருந்த போதிலும் அதனை ஜனாதிபதி உணராமல்போனமை துரதிஷ்டமான ஒன்றே.

கூடாத கூட்டம் கூடுவதன் விளைவை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இப்போது உணர்ந்துள்ளார் சமாதானத்திற்கு விரோதமான ஒரு கட்சியுடன் கூட்டுச்சேர்ந்து கொண்டு பொதுக்கட்டமைப்பை அமைப்பேன் எனக்கூறுவது எவ்வளவு மடைமைத்தனமானதென்பதை ஜனாதிபதி இப்போது அனுபவரீதியாக உணர்ந்திருப்பார்.

ஆயிரக்கணக்கான சிங்கள இளைஞர்கள் உயிரிழப்பதற்கு காரணமாக இருந்த ஓர் அமைப்பே இந்த ஜே.வி.பி. அதுமட்டுமன்றி ஜனாதிபதி சந்திரிகாவின் கணவர் விஜயகுமாரதுங்காவின் கொலைக்கும் ஜே.வி.பியே சூத்திரதாரிகள் என்ற கருத்து பரவலாக உண்டு. அதேநேரம் ஜே.வி.பி.யின் தலைவர் சோமவன்ச அமரசிங்க கொலைக்குற்றம் சாட்டப்பட்ட ஒருவர். இதனால் அவர் இலங்கைக்கு வர முடியாமல் லண்டனில் தங்கியிருந்தார்.

லண்டனில் தஞ்சம் அடைந்திருந்த சோமவன்ச இலங்கைக்கு வருவதாயின் சிறிலங்கா சுதந்திரக் கட்சியுடன் கூட்டுச்சேரவேண்டிய கட்டாயதேவை இருந்தது.

எனினும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவுடன் நேரடியாக பேசுவதன் மூலம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியுடன் கூட்டுச்சேரமுடியாது என்பதை உணர்ந்து கொண்ட ஜே.வி.பி தனது திட்டத்தை நிறைவேற்றுவதற்கு வசதியாக சந்திரிகாவின் சகோதரனான அநுராபண்டாரநாயக்காவைப் பிடித்துக் கொண்டது.

தனது சகோதரி சந்திரிகாவுடன் பகைத்துக் கொண்டு ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்ட அநுரா. ஐக்கிதேசியக்கட்சியில் வெற்றிக்காக தனது சகோதரியையே மிகமோசமாக விமர்சித்தவர். அவரின் விமர்சிப்பை பொறுத்துக் கொள்ள முடியாத அப்போதைய பிரதிப்பாதுகாப்பு அமைச்சராக இருந்த அனுருத்த ரத்வத்த, அநுராவின் பிறப்புக் குறித்து சந்தேகம் எழுப்பினார்.

இதனால் பண்டாரநாயக்க குடும்பத்திற்கு பெரும் களங்கம் ஏற்பட்டது. இவ்வாறு தனது குடும்ப கௌரவத்திற்கு பங்கமாக இருந்த அனுரா ஜே.வி.பி.யின் திட்டத்துக்குள் வீழ்ந்து ஜனாதிபதி சந்திரிகாவையும் ஜே.வி.பி.யுடன் இணையவைத்தார்.

இப்போது ஜே.வி.பி, அரசைப் பயமுறுத்துகின்றது சமாதானத்திற்கு எதிராக கோஷமிடுகின்றது. சுனாமி பொதுக்கட்டமைப்புக்குத் தடையாக இருக்கின்றது. இந்த உபத்திரம் நிறைந்த ஜே.வி.பியை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா துணிவோடு தூக்கிஎறிவாராயின் அவரின் அரசியல் பயணம் வெற்றிப்பாதையில் செல்வதும் சமாதானப்பணி மீளத்தொடரப்படுவதும் சாத்தியமாகும்.

# சிங்கள ஆட்சியாளர்களும், பேரினவாதிகளும் யதார்த்தத்தைப் புரிந்து செயற்பட வேண்டும்

## இல்லையேல் விளைவுகள் விபரீதமாகுமென எச்சரிக்கிறது தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம்

(யாழ்ப்பாணம்)

மீண்டும் பேரின்வாதம் தனது கோரமுகத்தை காட்டத் தொடங்கி விட்டது என தமிழ்த்தேசிய விழிப்புணர்வுக் கழகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதுவிடயம் தொடர்பில் தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக் கழகம் விடுத்துள்ள அறிக்கையில்,

சிங்கள ஆட்சியாளர்களும் சிங்களப் பேரினவாதிகளும் தமிழ் மக்களின் உரிமைகளில் எதனையுமே அவர்களுக்கு வழங்கப்போவதில்லை என்பதனை இன்று தென்னிலங்கையில் இடம்பெறும் சம்பவங்கள் புடம்போட்டு காட்டுகின்றன.

மாறி, மாறி ஆட்சிக்குவரும் ஆட்சியாளர்களினால் தமிழ் மக்கள் தொடர்ந்தும் ஏமாற்றப்பட்டு வருகின்றமையானது இன்று ஓர் உச்சநிலையை அடைந்துள்ளது. தமிழ் மக்கள் தமது உரிமைகளுக்காக அகிம்சை ரீதியாக போராடிய போதெல்லாம் அடக்கப்பட்டார்கள், துன்புறுத்தப்பட்டார்கள் தலைவர்களினால் அரசியல் உரிமைக்காக சிங்கள அரசுகளோடு எழுதப்பட்ட ஒப்பந்தங்கள் எல்லாம் சிங்களப் பேரினவாதிகளாலும் பௌத்த மதத்தின் பேராலும் திட்டமிட்டு கிழித்தெறியப்பட்டன.

இன்று தமிழ் மக்களின் இழந்த உரிமைகளை பெறுவதற்கான அகிம்சை போராட்டமானது ஆயுதப் போராட்டமாக முனைபபு பெற்று ஓர் தலைமையின் கீழ் மிகவும் பலத்தோடு நிற்கின்றது.

இந்த நிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி மூன்றுவருடம் கடந்த நிலையிலும் தமிழ் மக்களது வாழ்க்கையில் எவ்வித முன்னேற்றமும ஏற்படவில்லை. மாறாக பாரிய யுத்தநிறுத்த மீறல்களில் ஸ்ரீலங்கா இராணுவம் ஈடுபடுவதனூடாகவும் தனது இராணுவ துணைக்குழுக்களின் மூலம் தமிழ் மக்கள் மீதான நிழல் யுத்தத்தினையும், பாரிய இராணுவ அழுத்தங்களையும் திட்டமிட்ட பொருளாதாரத் தடைகளையும் ஏற்படுத்தி வருகின்றது.

அரசியல் உரிமைகளுக்காக ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தங்கள சிங்களப் பேரினவாதிகளால் கிழித்தெறியப்பட்டன. இன்று தமிழ் மக்களின் பொறுமையினைச் சீண்டும் உச்சக்கட்டச் செயலாக சுனாமி இயற்கை அனர்த்தம் காரணமாக பாதிக்கப்பட்ட மக்களின் மனிதாபிமான உதவிக்காக உலக நாடுகள் முன்னிலையில் மேற்கொள்ளப்பட்டுவரும் பொதுக் கட்டமைப்பினூடாகக்கூட தமிழ் மக்கள் தமக்குத் தேவையான மனிதாபிமான உதவிகளை பெற்றுவிடக்கூடாது என்பதில் சிங்கள பௌத்த பேரினவாதம் கங்கணம் கட்டி நிற்கின்றது.

ஜே.வி.பி.,ஜாதிக ஹெலஉறுமய என பேரினவாதத்தின் கரங்கள் நீண்டு செல்கின்றன. இவர்கள் தமிழ் மக்களின உரிமைகளுடன் விளையாடுவதனை உடனடியாக நிறுத்த வேண்டும்.

தொடர்ந்தும், தமிழர்களின் நலனுக்காக ஏற்படுத்தப்படும் ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்படுமானால், நிச்சயம் சிங்களப் பேரினவாதிகள் அதன் வளைவை வெகுவிரைவில் சந்தித்தே ஆகவேண்டும்.

எனவே, சிங்கள ஆட்சியாளர்களும் பௌத்த பேரினவாதிகளும் இன்றைய யதார்த்தத்தினை புரித்து செயற்பட வேண்டும். இல்லையேல் விளைவுகள் விபரீதமாகும் என்பதனை தெளிவுபடுத்த விரும்புகின்றோம் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற)

# இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவுமாறு இலங்கை அழைப்பு விடுத்தால் சீனா ஏற்கத் தயார்

## -தெற்காசிய ஊடகவியலாளர் சந்திப்பில் வென்ஜியாபோ

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண உதவுமாறு அழைப்பு விடுக்கப்பட்டால் அதை ஏற்க சீனா தயாராக இருப்பதாக சீன வெளிவிவகார துணைஅமைச்சர் வென்ஜியாபோ தெரிவித்துள்ளார்.

சீனா சென்றிருந்த தெற்காசிய நாடுகளின் ஊடகவியலாளாகளுடனான சந்திப்பிலேயே சீன வெளிவிவகார துணை அமைச்சர் வென்ஜியாபோ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். இச்சந்திப்பில் அவர் மேலும் கருத்து வெளியிடுகையில் இலங்கை இனப்பிரசசினைக்கும் தீர்வுகாண்பதற்கு சர்வதேச நாடுகளின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமானது.

இலங்கை அரசிற்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையேயான அமைதிப்பேச்சுக்களை முன்னெடுக்க உதவுமாறு சீனாவிற்கு அழைப்புவிடுக்கப்பட்டால் அதையேற்க சீனா தயாராக இருக்கின்றது.

இலங்கை அரசிற்கும் சீனாவிற்கும் இடையே நல்லுறவு நீடிக்கின்றது. இலங்கைத் தீவின் அமைதி முயற்சிகளை எப்பொழுதும் சீனா ஆதரித்தே வந்துள்ளது. வளரும் நாடுகளுடன் குறிப்பாக தெற்காசிய வளரும் நாடுகளுடன் நல்லுறவைப் பேணுவதில் சீனா முக்கியத்துவம் அளித்து வருகிறது.

இந்தியாவிற்கும் சீனாவிற்கும் இடையேயான உறவில் கடந்த சில ஆண்டுகளாக குறிப்பிடத்தக்க முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. ஐக்கியநாடுகள் சபையில் இந்தியா குறிப்பிடத்தக்க பங்காற்ற வேண்டும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்பு சபையை மாற்றியமைக்கும் போது அதில் இடம் பெறும் நிரந்தர உறுப்பு நாடுகளுக்கு வீட்டோ அதிகாரம் கண்டிப்பாக வழங்கப்படவேண்டும்.

ஐக்கியநாடுகள் பாதுகாப்புச் சபையில் எந்த மாற்றம் மேற்கொள்ளப்பட்டாலும் வளரும் நாடுகளுக்கும் சமநிலையிலான முக்கியத்துவம் அளிக்கப்படவேண்டும். தாய்வான் பிரச்சினையை பொறுத்தவரையில் ஒரே சீனா என்ற கொள்கைதான் சீனா அரசின் கொள்கை பிரிவினைக்கு இடமேதும் இல்லை. ஒரே சீனா என்ற கொள்கைதான் தாய்வான் மக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்றார்.

இந்தியா, நேபாளம் பாகிஸ்தான் பங்களாதேஷ் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளைச் சேர்ந்த15 ஊடகவியலாளர்கள் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர். (ற-9)

# நாட்டில் பதற்ற நிலையை ஏற்படுத்த சில தீய சக்திகள் தீவிர முயற்சி

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

உத்தேச சுனாமி நிவாரணக் கட்டமைப்பு யோசனை குறித்து தெரிவிக்கப்பட்ட எதிர்ப்புகளை பரிசீலனை செய்வதாக ஜனாதிபதி மகாநாயக்க தேரர்களிடம் உறுதியளித்துள்ள போதிலும், பல சக்திகள் நாட்டில் பதற்றமான ஒரு நிலைமையை உருவாக்க முயற்சி செய்து வருவதாக அரசாங்கம் குற்றம்சாட்டியுள்ளது.

கடந்த பதினொருவருட காலத்தில் நாட்டில் சமாதானத்தையும் அமைதியையும் அபிவிருத்தியை ஏற்படுத்துவதற்கு ஜனாதிபதி அர்ப்பணிப்புடன் பாடுபட்டு வருகிறார்.

நாட்டின் பிரதேச ஒருமைப்பாட்டிற்கும் இறைமையைப் பேணிக்காப்பதற்கும் ஜனாதிபதி உறுதி பூண்டுள்ளார்.

சுனாமியின் பின்னர் நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் புனர்நிர்மாணப் பணிகளை செய்வற்கும் அரசாங்கம் எடுத்துவரும் முயற்சிகள் குறித்து சர்வதேச சமூகமும் உலகத் தலைவர்களும் பாராட்டுத் தெரிவித்துள்ளனர்.

அரசாங்கம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் உத்தேச நிவாரண கட்டமைப்பு முழுமையாக சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கும் வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட பகுதிகளை புனர்நிர்மாணம் செய்தவற்கும் கொண்டுவரப்படுகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மகாசங்கத்தினரதும் பொது மக்களினதும் உடன்படின்றி இந்த நிவாரண கட்டமைப்பை ஒருபோதும் அமுல் செய்வதில்லையென்று அரசாங்கம் வலியுறுத்திக்கூறியுள்ளது.

இந்தக் கட்டமைப்பு தொடர்பாக பொதுமக்களின் அபிப்பிராயத்தையும் யேசன்னைகளையும் ஏற்றுக்கொள்ள அரசாங்கம் எப்போதும் தயாராக இருக்கின்றது. பொதுமக்களுக்கு இது சம்பந்தமாக விளக்குவதற்காக புரிந்துணர்வுத் திட்டங்களையும் அரசாங்கம் அமுல்செய்யவுள்ளது.(ற-5)



## திசைரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்

நம்மை நமது பணியாளர்களாக கடவுள படைக்கவில்லை. நாமும் கடவுளுக்கு சமமானவர்கள், நண்பர்கள் என்று தெரிந்து கொள்ளும போது சமத்துவத்தையும் சுதந்திரததையும் நாம் அடைகிறோம். நித்தியமான பரம்பொருளிடமிருந்து இம்மியளவும் நாம் விலக இருக்கும்வரை அச்சம் நம்மை விட்டு விலகாது.

சுவாமி விவேகானந்தர்

# பொதுக்கட்டமைப்புக்கு எதிராக 61.9 சதவீதத்தினர் வாக்களிப்பு

## ஜனாதிபதி செயலகம் கருத்துக்கணிப்பு

(கொழும்பு)

தென்னிலங்கை அரசியல்வாதிகளினால் இனப்பிரச்சினையை தீர்க்க முடியாது என 44 சதவீதமானோர் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

ஆழிப்பேரலை மீள் அமைப்பிற்கான பொதுக்கட்டமைப்பு தொடர்பாக ஜனாதிபதி செயலகம் நடத்திய கருத்துக்கணிப்பிலேயே இந்த முடிபு வெளியாகியுள்ளது.

தொலை பேசிவழியாக இருநாட்கள் இந்தக்கருத்துக்கணிப்பை செயலகம் நடத்தியுள்ளது. இதில் பொதுக்கட்டமைப்புக்கு எதிராக 61.9 சதவீதத்தினரும் பொதுக்கட்டமைப்பிற்கு ஆதரவாக 21.93 சதவீதத்தினரும் கருத்துத்தெரிவித்துள்ள அதேநேரம் 16.98சதவீதத்தினர் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை.

அதேபோன்று ஜனாதிபதி குமாரதுங்காவால் இனப்பிரச்சினையை தீர்க்கமுடியும் என்று 34 சதவீதத்தினரும் அவரால் இப்பிரச்சினைக்கு தீர்வுகாணமுடியாது என்று 31.6 சதவீதத்தினரும் கருத்துத்தெரிவித்துள்ளனர்.

இதேவேளை தென்னிலங்கை அரசியல்வாதிகளினால் இலங்கை இனப்பிரச்சினைக்கு தீர்வு காணமுடியாது என்று 44 சதவீதத்தினர் கூறியுள்ளனர். (ந-9)

# உதவி வழங்கும் மாநாடு இன்று வாஷிங்டனில்

(கொழும்பு)

இலங்கைக்கு உதவிவழங்கும் நாடுகளின் மாநாடு வாஷிங்டனில் இன்று நடைபெறவுள்ளது.

இம்மாநாட்டில் வடக்கு கிழக்கு புனரமைப்பிற்கான பொதுக்கட்டமைப்பு தொடர்பில் தீவிரமாக ஆராயப்படவுள்ள தெரிவிக்கப்படுகிறது.

ஜப்பானின் டோக்கியோவில் 2003ம் ஆண்டு நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின்போது அமைக்கப்பட்ட விசேடகுழுவின் உறுப்பினர்களே இம்மாநாட்டில் கூடவுள்ளனர். இலங்கைக்கான ஜப்பானின் விசேட தூதுவர் யசூசிஅகாசி நோர்வேயின் விசேடவெளிவிவகார அமைச்சர் விடார்ஹெல்கிசன் மற்றும் அமெரிக்க பிரதிஇராஜாங்கச் செயலாளர் ஆகியோர் இதில் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-8)

# கல்வியங்காட்டு சந்தைப் பகுதியில் வர்த்தக நிலையமொன்றில் தீ விபத்து

## 50இலட்சம் பெறுமதியான பொருட்கள் நாசம்

(யாழ்ப்பாணம்)

கள்ளிங்காடு சந்தைப்பகுதியில் உள்ள பலசரக்கு கடையொன்று முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது. நேற்று அதிகாலை 3.30மணியளவில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சுமார் 50 இலட்சம் பெறுமதியான பொருட்கள் எரிந்து நாசமாகியுள்ளதென தெரிவிக்கப்பட்டது.

கல்வியங்காட்டுப் பகுதியில் இயங்கி வரும் ஏகாம்பரம் வாணிப நிலையம் என்ற பாஸ்கரன் என்பவருக்குச் சொந்தமான கடை இதுவாகும். கடைதீப்பற்றிக் கொண்டதையடுத்து யாழ்.மாநகர சபை தீயணைக்கும் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டு சம்பவஇடத்திற்கு விரைந்த தீயணைப்புப் பிரிவினர் சுமார் 3மணித்தியாலங்கள் போராடி தீயினைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வந்தனர்.இதுபற்றி கோப்பாய் பொலிஸாரிடம் முறையிட்டதையடுத்து விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-74)

# புத்தர் சிலை விவகாரம் இன்று நீதிமன்றில் வழக்கு

(திருகோணமலை)

திருகோணமலையில் அமைக்கப்பட்ட புத்தர்சிலைதொடர்பாக ஏற்பட்டுள்ள பதற்றத்தை தணிப்பதற்கான அமைதிக்கூட்டம் ஒன்று நேற்று நடைபெற்றுள்ளது.

திருகோணமலை சகவாழ்வு மன்றம்,போருக்கு எதிரான முன்னணி என்பவற்றின் ஏற்பாட்டில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. இதில் சர்வ மதக்குருவினர், தமிழ் மக்கள் பேரவையினர், வடக்கு கிழக்குச் சிங்கள சங்கம், முச்சக்கர வண்டி சாரதிகள் என்பவற்றின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

மூன்று சமூகத்தினருக்கும் பாதகமில்லாது புத்தர்சிலை விடயத்தில் தீர்வுகாணப்படவேண்டுமென முயற்சித்தபோதும் இறுதியில் இது தொடர்பான முடிபுஎதுவும் எடுக்கப்படவில்லை.

இதேவேளை இவ் விடயம் தொடர்பாக இன்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் சட்டமாதிபர் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படுவதனால் நீதிமன்றத்தின் தீர்ப்பை நடைமுறைபடுத்த அனைத்து தரப்பினரும் இணக்கப்பாடான ஒரு நிலைக்கு வரவேண்டுமென தீர்மானிக்கப்பட்டுள்ளமையொழிய புத்தர் சிலைவிவகாரம் தொடர்பாக எந்வொரு முடிபும எடுக்கப்படவில்லை. (ச,8)

# கருணா குழவுடனான மோதலில் எட்டு போராளிகள் வீரச்சாவு

(கிளிநொச்சி)

கடந்த 11.04.2004 அன்று கருணாகுழுவினரின் சதிமுறியடிப்புச் சமரில் 8போராளிகள் வீரச்சாவடைந்துள்ளதாக தமிழீழவிடுதலைப்புலிகளின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

வீரவேங்கை தேன்முகில் (தங்கவேல் வசந்தகுமாரி), கிநதுள்வேவா கரடியனாறு, வீரவேங்கை தோகையொழி இராசநாயகம் இந்துமதி (தும்மங்கேணி மட்டக்களப்பு), வீரவேங்கை சிவாசி பாலசுந்தரம் தேவகி (கொக்கட்டிச்சோலை), வரவேங்கை தாரணி இராசதுரை ரதி (கரடியனாறு), வீரவேங்கை செவ்விழி பாலசிங்கம் மோகனா(பால்சேனை அம்பாறை), வரவேங்கை கதிரொளி தர்மலிங்கம் வனிதா(முனைக்காடு கொக்கட்டிச்சோலை), வீரவேங்கை கதிரமுது கதிர்காமத்தம்பி அம்பிகாவதி(உறுகாமம் மட்டக்களப்பு), வீரவேங்கை கங்கை/இன்பரூபா வீரசிங்கம் சிறிதேவி, இலுப்படிச்சேனை ஆகியபோராளிகளே வீரச்சாவடைந்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.(ச)

# உப்பாறுப் பகுதிக்குள் நுழைந்த பொலிஸார் புலிகளால் கைது

(திருகோணமலை)

திருகோணமலையில் உப்பாறு பகுதியில் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசதிற்குள் நுழைந்த பொலிஸ் கான்டபிள் ஒருவரை தடுத்துவைத்துள்ளதாக திருகோணமலை மாவட்ட அரசியல்துறை பொறுப்பாளர் எஸ்.எழிலன் தெரிவித்துள்ளார்.

சீனன்குடாப் பொலிஸ்நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸ் கான்ஸ்டபிளே புலிகளால் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

குறித்த பொலிஸ்கான்ஸ்டபிள் தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட்டு வருவதாகவும் எழிலன் தெரிவித்தார்.

இதேவேளை திருகோணமலை மாவட்ட அரசியல் துறையினருக்கும் தோப்பூர் முஸ்லிம் பிரதிநிதிகளுக்கிடையிலான சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது.

விடுதலைப்புலிகளின் சம்பூர் அரசியல்துறை அலுவலகத்தில் நடைபெற்ற இச்சந்திப்பில் தோப்பூர் (முஸ்லிம் மக்கள் எதிர்நோக்கும் காணிப்பிரச்சினைகள், மற்றும் விவசாயப்பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது. (ச-8)

# தமிழகப் பயணம்...

தவிர்க்க முடியாத காரணத்தால் தமிழகப்பயணம் இன்று வெளிவரவில்லை நாளை வெளிவரும். (ஆ-ர்)


# கண்ணீர் அஞ்சலி

## கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை

(இளைப்பாறிய வடபிராந்திய போக்குவரத்துச் சபை சாலைப்பரிசோதகர்)

எமது கல்லூரியின் அதிபர் பொ.கமலநாதன் அவர்களின் அன்புத்தந்தையார் கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை (ஓய்வு பெற்ற வடபிராந்தியப் போக்குவரத்துச் சபை சாலைப்பரிசோதகர்) அவர்களின் மறைவினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா இறைசாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி!

ஆசிரியர்கள்,
கொக்குவில் இந்துக்கல்லூரி,
கொக்குவில்.

(இ-002)

# மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை

(இளைப்பாறிய வடபிராந்திய போக்குவரத்துச் சபை சாலைப்பரிசோதகர்)

தாவடியை பிறப்பிடமாகவும் தற்போது சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய வடபிராந்திய போக்குவரத்துச்சபை சாலைப்பரிசோதகர் கணபதிப்பிள்ளை பொன்னுத்துரை 12.06.2005 ஞாயிறு மாலை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக்கணவரும் கமலநாதன் (அதிபர், கொக்குவில் இந்துக்கல்லூரி), சந்திரநாதன் (நில அளவைத்திணைக்களம் யாழ்ப்பாணம்), ஜெகநாதன் (ஜேர்மனி), ஜெயராணி ஆகியோரின் அன்புத்தந்தையாரும் சந்திரமதி, ரதி சந்திரநாதன் (ஆசிரியை, கொக்குவில் இந்துக்கல்லூரி), சோதி (ஜேர்மனி), லிங்கேஸ்வரன் (எரிபொருள்விற்பனை நிலையம், சுன்னாகம்) ஆகியோரின் அன்பு மாமனாரும்.

பால்ராஜ்,, பவானி, மதூசன், துவாரகன், கோபிகன், சுஜன், தர்சிகன், சபீனா, தர்சிகா, மாக்கொஸ், ஜெனனி ஆகியோரின் பேரனாரும் றெபீக்காவின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (13.06.2005) திங்கட்கிழமை பி.ப.2மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் பூவோடை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்.
பொ.கமலநாதன் (மகன்)
அதிபர்,
கொக்குவில் இந்துக்கல்லூரி.

சுன்னாகம்தெற்கு
சுன்னாகம்.


# முரண்பட்ட இருகட்சிகள்...

சாலைகள் அமைப்பது போன்றவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் இவர்கள், தேசிய பிரச்சினை தொடர்பில் எவ்வாறு ஒன்று படுவார்களென கேள்வி யெழுப்பினார்.

அதிகாரத்தை தக்கவைத்துக் கொள்வதற்காக தமது கட்சி தேசிய பிரச்சினையை பயன்படுத்திக்கொள்ளவில்லையெனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

வடக்குக் கிழக்குப் பிரச்சினையை முடிவுக்குக்கொண்டுவராமல் எந்தவொரு நடவடிக்கையையும் நாட்டில் மேற்கொள்ளமுடியாதெனத் தெரிவித்தார். (ச-8)

# பொதுக்கட்டமைப்பு உருவாக்க...

ஆராயப்பட்டது.

மீள்கட்டமைப்பு பணிகளை மேற்கொள்வதற்கு விடுதலைப்புலிகளை உள்ளடக்கியதான பொதுக்கட்டமைப்பு அமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை கூட்டமைப்பு பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் எடுத்துக்கூறியபோது ஜனாதிபதி அதனை ஏற்றுக்கொண்டார்.

பொதுக்கட்டமைப்பை உருவாக்குவதில் தனக்கு எவ்வகையான இடையூறுகள் வந்தாலும் அவ்விடயத்தில் தான் மிகவும் உறுதியாக உள்ளதாக ஜனாதிபதி கூறியுள்ளார்.

பொதுக்கட்டமைப்பின் பின் முழுமையான நோக்கத்தையும் நிறைவேற்றகூடிய விதத்தில் அதனை அமுல்படுத்த திட்டமிட்டிருப்பதாகவும் அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அது விரைவில் உருவாக்கப்படும் எனவும் ஜனாதிபதி உறுதியளித்துள்ளார்.

தொடர்ந்து திருகோணமலை நிலைமைகள் தொடர்பாக அரசாங் தூதுக்குழுவினர் அங்குசென்று பல வாக்குறுதிகள் வழங்கப்பட்ட போதிலும் அவை நிறைவேற்றப்படவில்லை என்பதனையும் கூட்டமைப்பினர் சுட்டிக்காடினர்.

அவற்றை செவிமடுத்த ஜனாதிபதி அவை நிறைவேற்றப்படும் எனவும் இன்று அரச தூதுக்குழுவினர் திருகோணமலைக்கு சென்று அப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வார்கள் எனவும் கூறினார்.

அத்துடன் அங்கு குவிக்கப்பட்டுள்ள இராணுவத்தினர் அகற்றப்பட்டு வருவதாகவும் படிப்படியாக அவர்கள் வாபஸ்பெறுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை பொதுக்கட்டமைப்பை உருவாக்கினால் ஜே.வி.பி. மற்றும் ஜாதிகஹெல உறுமய என்பன அரசில் இருந்து வெளியேறும் என எச்சரித்துள்ள நிலையில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் உதவிபெறப்படுவது குறித்தும் விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

எனினும் அதனை உறுதிப்படுத்த முடியவில்லை இச் சந்திப்பின் போதுகூட்டமைப்பின் சார்பில் அதன் பாராளுமன்ற குழுத்தலைவர் இரா சம்பந்தன் மற்றும் ஜோசப்பரராசசிங்கம், மாவை சேனாதிராசா சுரேஷ் பிரேமச்சந்திரன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.கே.சிவாஜிலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர். அரச தரப்பில் டிலான் பெரேரா, விஜதாச ராஜபக்ஷ ஆகியோர்கலந்து கொண்டனர்.(ச.8)


மனோகரா யாழ்.
08.06.2005 முதல்
ஸ்ரீகாந், கோபிகா, விவேக் நடித்த


கா.நேரம்: 9.30, 2.30, 6.30, 9.30
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு

நாதன்ஸ் சினிமா
குளிரூட்டப்பட்டது யாழ்ப்பாணம்
இன்று முதல்
இன்டி பெண்டன்ஸ்டே டைரக்டர்
ரோலண்ட் எம்ரீக் மீண்டும்
முத்திரை பதிக்கும் படைப்பில்
THE DAY AFTER TOMORROW
(தமிழாக்கம்)
சுனாமி போன்ற அழிவுகளை விபரிக்கும் சித்திரம்
கா.நே: 10.30, 2.30,6.30, 9.30 (பு.நே)

நிறைஞ்சனாஸ்
சங்கானை
நவதீப், தேசாஜெயராம்,
ஸமிக்சா, பிரகாஸ்ராஜ்
நடித்த
அறிந்தும் அறியாமலும்
கா.நே: 11.00, 2.45, 6.00 (பு.நே)


இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3, இரண்டாம் ஒழுங்கை நிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.06.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.